
# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு
நவம்பர் - 2010 * விலை ரூ.10/-




தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
அன்னை தெரசா


தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
அன்னை தெரசா மகளிர் வளாகம்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களால்
1.11.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது.

# தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041

ஐப்பசி - கார்த்திகை

நவம்பர் - 2010

மலர் : 42 இதழ் : 5



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**எஸ்.பி. எழிலழகன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**பா. பாலசுப்பிரமணியன்**
**பொ.க. பாண்டியன்**

உதவி ஆசிரியர்கள்

**த. கலைச்செல்வன்**
**வ. பாலசுப்பிரமணியன்**
**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்.** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.**

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடா முயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


* வேளாண் கருத்தரங்கம் மற்றும் அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை ... 2
* அன்னை தெரசா மகளிர் வளாகத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை .... 10
* தமிழ்நாடு கட்டுமான உயர் பயிலகம் (TAC) அடிக்கல் நாட்டு விழா மற்றும் அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா .... 16
* திருவள்ளுவர் பல்கலைக்கழகப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை .... 22
* சட்டப்பேரவையில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் துணை மதிப்பீட்டை தாக்கல் செய்து ஆற்றிய உரை .... 27
* இந்திய தலைமை தணிக்கைத் துறையின் 150 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை .... 30
* புதுடெல்லியில் நடைபெற்ற செயல்திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை .... 32
* சென்னையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் தனிநபர் கடன் வழங்கும் விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை .... 35
* கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா .... 38
* நலமான தமிழகம் திட்டம் தொடக்கம் .... 42


### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
சென்னை, கதீட்ரல் சாலையில் அமைந்துள்ள
செம்மொழிப் பூங்காவினை திறந்து வைத்தார் (24.11.2010)

# மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் இந்த ஆண்டு விவசாயிகளின் நிலவரி ரத்து செய்யப்படும்

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் 24-11-2010 அன்று நடைபெற்ற வேளாண் கருத்தரங்கம் - அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை




இன்று மாலையிலிருந்து இதுவரையில் மாநாட்டு நிகழ்ச்சிகளை காணுகின்ற வாய்ப்பை நான் பெற்று பெருமகிழ்ச்சியோடு உங்கள் முன்னால் வீற்றிருக்கின்றேன். மாலையில் செம்மொழிப்பூங்கா திறந்து, அங்கே பூத்துக் குலுங்குகின்ற மலர்களை, வளமான செடிகளை, மூலிகைகளை – இவற்றையெல்லாம் கண்டுகளித்து, இங்கே வந்தால், அந்த மலர்களைப்போலவே மகிழ்ச்சி குலுங்க வீற்றிருக்கின்ற உங்களுடைய திருமுகங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

இந்நாளில் என்னுடைய வாழ்த்துகளை வழங்குகின்ற இந்த நேரத்தில் ``மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்'' என்று இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகார வரிகளை நினைவு கூர்கிற வகையில், எதிர்பார்த்த மழை கடந்த சில நாட்களாக, சில வானொலிகளில், தொலைக்காட்சிகளில் சொல்லுவதைப் போல ''கொட்டோ கொட்''டென்று கொட்டி, நம்மையெல்லாம் மகிழ வைத்திருக்கிறது.

இந்த மழை தொடர்ந்து இன்னும் தன்னுடைய கைவரிசையைக் காட்டுமேயானால், நம்முடைய விவசாயத் தோழர்கள், தமிழ்ப் பெருங்குடி மக்கள், பல்வேறு மாவட்டங்களிலே வாழுகின்ற ஏழை எளியவர்கள், குடிசைவாழ் மக்கள் பல பாதிப்புகளுக்கு உள்ளாக நேரிடும் என்பதை நான் உணராதவன் அல்ல. அதனால் தான் மழை

பொழிந்து சேதாரம் ஏற்பட்ட இடங்களில் போக்குவரத்து பாதிப்பிற்குள்ளான இடங்களில், விவசாயம் எங்கே பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அத்தகைய இடங்களில் எல்லாம் உடனடியாக துயர்துடைப்புப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கு உறுதுணையாக பணியாற்றுகின்ற அலுவலர்களுக்குப் பக்கத் துணையாக அரசியல் கட்சிகளின் நண்பர்களும், அவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும்; குறிப்பாக ஆளுங்கட்சி நண்பர்கள் அவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என்றெல்லாம் அறிக்கை விடுத்து அத்தகைய பணிகளும் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும்.

### துயர் துடைக்க முன்வர வேண்டும்


எனவேதான், அவர்களுடைய கஷ்டங்களை, பாதிப்புகளைப் பகிர்ந்து கொள்கிற வகையில் இந்த அரசு, இந்த நன்னாளில் உங்களையெல்லாம் கண்டு மகிழ்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது என்றாலும் கூட, உங்களுடைய அருந்துணையோடும், உதவியோடும் அவர்களுக்கு உற்ற சங்கடங்களை, குறிப்பாக வேளாண் பெருமக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்களைப் பகிர்ந்து கொள்ள – உங்களுக்கெல்லாம் அன்பழைப்பை நான் விடுக்கின்றேன். அந்த அழைப்பை நீங்கள் ஏற்று, அவர்கள் துயர் துடைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத் தொடக்கமாக இந்த மாநாடு அமையுமேயானால், என்னைப் போல் மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. அந்த மகிழ்ச்சியை நீங்கள் எனக்கு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால், அளிப்பீர்கள் என்று நான் எப்படி உங்களிடம் நம்பிக்கை வைக்கிறேனோ, அதைப்போல, நீங்களும் அளிப்பீர்கள் என்று என்னிடத்தில் நம்பிக்கை வைப்பவர்கள். அளிக்க வேண்டும் என்று கேட்ட நேரத்தில் எல்லாம், அளித்தவன் நான் – அளித்துக் கொண்டு இருப்பவன் நான் – அளிக்கப் போகிறவனும் நான் – என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இங்கே முன்னிலை உரையாற்றிய வேளாண்துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் உரையாற்றியபோது, சில கோரிக்கைகளை நினைவு படுத்தினார். சில வேண்டுகோள்களை முன்னிலைப்படுத்தினார். அவர் அமைச்சர் என்பது உங்களுக்குத் தெரியும். எனக்கும் தெரியும். அமைச்சரவை கூடும் போது, அங்கே வைக்க வேண்டிய கோரிக்கைகளை, சொல்ல வேண்டிய கருத்துக்களை இங்கே சொன்னார். இங்கே சொன்னதற்குக் காரணம், அங்கே ஒரு வேளை சொல்லியிருப்பாரோ, இல்லையோ என்ற சந்தேகம் உங்களுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான். உங்களையெல்லாம் வைத்துக்கொண்டு அதைச் சொன்னார் என்பதை நான் தெளிவாக அறிவேன்.

குறிப்பாக, இன்று செம்மொழிப்பூங்கா திறப்பு விழா, வேளாண் அலுவலர் மாநாடு இரண்டும் இணைந்து ஒரே நாளில் நடைபெற்றிருப்பதே நாம் வியந்து வியந்து பாராட்டத்தக்க ஒன்றாகும். இந்த பூங்கா திறப்பு விழாவையொட்டி, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, தோட்டக்கலைக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்று குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் சிந்திக்காமலில்லை. பல்கலைக்கழகம் வேளாண்மைக்கு வேண்டும் என்று முதன்முதலாக சிந்தித்தவனே நான் தான். இந்த அண்ணன் சிந்தித்த பிறகுதான் இந்த தம்பி அதை செயல்படுத்தினார் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

### கோவை வேளாண் பல்கலைக் கழகம்

நான் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பல பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் சென்ற போது, குறிப்பாகவும் சிறப்பாகவும், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த திரு.குர்னாம் சிங் அவர்கள் என்னை பஞ்சாபிற்கு வரவேண்டும் என்று அழைத்து, பஞ்சாப் மாநிலத்திலே பல பகுதிகளை நானும், மறைந்த தம்பி முரசொலி மாறனும் மற்றவர்களும், அந்த சுற்றுப்பயணத்திலே ஈடுபட்டபோது, அங்கே பல செய்திகளை என்னால் உணர முடிந்தது. பஞ்சாப் மாநிலம் வேளாண் துறையிலே பிரசித்தி பெற்ற மாநிலம். வேளாண் துறை மக்கள் வளம் பொருந்திய வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிற மாநிலம். அப்படிப்பட்ட பஞ்சாப் மாநிலத்தில் எனக்கு அவர்கள் கொடுத்த பணி, சில வரவேற்புகள், சில நகராட்சிகளிலே உரைகள், கல்லூரிகளிலே கருத்து விளக்கங்கள் – இவைகளைத் தொடர்ந்து ஒரு பல்கலைக் கழகத்தையும் எனக்கு அங்கே காட்டி, இது பஞ்சாபில் உள்ள மிகச்சிறந்த வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்று சொன்னார்கள். அதைப்பார்த்து முடித்துவிட்டு ஊர் திரும்பும்போது, என்னுடைய சிந்தனை அலைகளெல்லாம் இப்படி ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினை தமிழகத்திலே நாம் அமைக்க வேண்டுமே என்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது. அதை எங்கே அமைப்பது ? என்று நான் எண்ணியபோது கோவைதான் சிறந்த இடமாக எனக்குத் தெரிந்தது. கோவையிலே வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை அமைத்தோம். அமைத்ததன் காரணமாகத்தான் அந்தப் பல்கலைக் கழகத்திலே இருந்த மூன்று மாணவிகள் தருமபுரியில் எரித்துக் கொல்லப்பட்ட போது நான் வருத்தப்பட்டேன்! அய்யோ! அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை நாம் ஏன் தொடங்கினோம், தொடங்கிய காரணத்தால் அல்லவா, அந்த மாணவிகள் அங்கே படிக்க நேர்ந்தது, அங்கே படிக்க நேர்ந்த காரணத்தாலல்லவா அவர்கள் சுற்றுலா செல்ல நேர்ந்தது; சுற்றுலா சென்ற காரணத்தாலல்லவா தருமபுரியிலே அவர்கள் அநியாயக்காரர்களால், வெறியர்களால் உயிரிழக்க நேர்ந்தது என்று நான் கண்ணீர் வடித்தது உண்டு. அப்படிப்பட்ட ஒரு சோக அடையாளத்தைக் கொண்ட அந்தக் கோவை வேளாண்



பல்கலைக்கழகத்தை நான் மறக்கவில்லை. அங்கே ஏற்பட்ட அந்த துயர நிகழ்ச்சிக்குக் காரணமான அந்த மாணவிகள் படித்த அந்த நிகழ்ச்சியை நான் என்றைக்கும் மறக்கப் போவதுமில்லை.

அப்படிப்பட்ட அந்தப் பல்கலைக்கழகத்தை நான் எண்ணியெண்ணி துன்புற்றிருக்கிற அந்த நேரத்திலே தான், இன்றைக்கு நம்முடைய வீரபாண்டி ஆறுமுகம் பேசும்போது, அவரும் ஒரு பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அதுதான் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டும் என்பதாகும்.

**விரைவில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம்**

ஏற்கெனவே வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால் நடைப்பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், கோவை, திருச்சி, நெல்லை ஆகிய நகரங்களில் அண்ணா பல்கலைக்கழகங்கள், சென்னையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக் கழகங்கள் அத்தனையும் இந்த ஆட்சியிலேதான் அமைக்கப்பட்டன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இவற்றையெல்லாம் தொடர்ந்து வீரபாண்டி இங்கே கேட்டுக்கொண்டதைப் போல, நம்முடைய வேளாண்துறை நண்பர்கள் நீண்டகாலமாக விரும்புவதைப் போல, தோட்டக்கலைப் பல்கலைக் கழகத்தை விரைவில் தொடங்குவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒரு கோரிக்கையோடு நிற்கவில்லை. இன்னும் ஓரிரு கோரிக்கைகளைப் பற்றி நான் கூற வேண்டியவனாக இருக்கின்றேன். நான் முதலில் குறிப்பிட்டதைப் போல, கடந்த சில நாட்களாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில், பெருமழை பெய்து நிவாரணப் பணிகளில் மாவட்ட ஆட்சியர்களும், அமைச்சர்களும் ஈடுபட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த மழை காரணமாக ஒருசில மாவட்டங்களில் பயிர்ச் சேதம் ஏற்பட்டு, விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்ட செய்திகளும் வந்துகொண்டுள்ளன. எந்தெந்த பகுதிகள் அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்ற முழு விவரம் அறிந்து, அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நிலவரி இந்த ஆண்டு முழுமையாக ரத்து செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்த அரசுக்குப் புதிதல்ல. 1995ஆம் ஆண்டு வறட்சி பாதித்தபோது, 19 மாவட்டங்களில், 13.5.1996 அன்று கழக அரசு பொறுப் பேற்றதும், 22 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிலவரியை ரத்து செய்த ஆட்சிதான் இந்த ஆட்சி. எனவே, அப்போது வறட்சிக்காக ரத்து செய்தோம். இயற்கையின் கூற்று வறட்சி வந்தும் நம்மை வாட்டும், மழை பொழிந்தும் நம்மை வாட்டும். இப்போது மழை பொழிந்து பாதிக்கப்பட்டிருக்கின்ற வேளாண் துறை மக்களின் துயர் துடைப்பதற்காக இந்த அறிவிப்பை நான் செய்திருக்கிறேன்.

**விவசாயத் தொழிலாளர்களின் ஓய்வூதியம் ரூ.500 ஆக உயர்த்தப்படும்!**

இன்னொன்று, உங்களுடைய கோரிக்கைகளிலே முக்கியமான ஒன்று – தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் – வேளாண்மை மற்றும்

தோட்டக்கலைத் துறையிலே பணியாற்றும் வேளாண்மை அலுவலர் – ஊதிய விகிதத்தினை வேளாண்மைப் பொறியியல் துறையில் சம நிலையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு இணையாக திருத்தி அமைக்கக் கோரி மனு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கையை இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதிலேயே குறிப்பிட்டிருக்கிறேன், கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். வெகு விரைவில் இதற்கான ஆணை வெளியிடப்படும். அதை நான் அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன். நிதித்துறைச்செயலாளர் இங்கே இருக்கிறார். அதற்காகத் தான் அவரையும் அழைத்து வந்திருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான அறிவிப்பு, இந்த நன்னாளில் நீங்கள் எல்லாம் குழுமியிருக்கிற இந்த வேளாண் மாநாட்டில் பேசும்போது, இது வேளாண் துறையிலே விவசாயிகளுக்கு மாத்திரமல்ல – அவர்களைப் போல பாடுபடுகின்ற ஏழை எளிய விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள், சாதாரண சாமானிய மக்கள் – அவர்களுக்கெல்லாம் பயன்படக்கூடிய அறிவிப்பு. இங்கு தொடங்கி அது வரையிலே பரவுகின்ற, பயனளிக்கின்ற அறிவிப்பு. 60 வயது கடந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் வழங்கப்படும் ஒய்வூதியம் 1997ஆம் ஆண்டு இந்த கழக ஆட்சியிலேதான் 100 ரூபாய் என்பதை 150 ரூபாய் ஆகவும், 2000–2001ல் அது 200 ரூபாய் ஆகவும் உயர்த்தப்பட்டது. 2006ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அது 400 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டது. இந்த மாநாட்டையொட்டி, இதை முன்னிட்டு, விவசாயத் தொழிலாளர்களின் ஒய்வூதியத்தை மாதம் 500 ரூபாய் ஆக உயர்த்தப்படும் என்று இந்த மாநாடு நடைபெறும் நன்னாளில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத்திரமல்ல – இந்த விவசாயத் தொழிலாளர்களைப் போல இதே பிரிவில் ஒய்வூதியமாக மாதம் 400 ரூபாய் யார் யார் பெற்று வருகிறார்களோ, அத்தனை பேருக்கும் இது அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்தியப் பேரரசு**

நம்முடைய அரசு உங்களுடைய ஒத்துழைப்போடு, உறுதுணையோடு எத்தனையோ திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறது. இந்த அரசு திட்டங்களை தீட்டுகிறபோது, மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுகிறது என்கிறபோது, இந்த அரசு என்று நான் குறிப்பிடும் போது சில பேர் தமிழ்நாட்டில், நான் ஏதோ மாநில அரசை, தமிழக அரசை மாத்திரம் தான் குறிப்பிடுகிறேன் என்று கருதிக்கொண்டு, மத்திய அரசுக்கு இதில் பங்கு கிடையாதா என்றெல்லாம் கேட்கிறார்கள். மத்திய அரசு என்று எதைச்சொல்லுகிறோம், அது மாத்திரமல்ல, இந்த நாட்டில் எந்தக் கட்சிக்காரர்களும் அதிகமாகச் சொல்லாத வார்த்தையை நான் பயன்படுத்துகிறேன். மத்திய அரசு என்கிறபோது, மத்திய அரசு என்று மாத்திரம் நான் சொல்லுவதில்லை, இந்தியப் பேரரசு என்று சொல்லுகிறேன். பேரரசு என்றாலே இந்த அரசும் உள்ளிட்டதுதான், அதுதான் பேரரசு. நாங்கள் சிற்றரசுதான். இந்த சிற்றரசுகள் எல்லாம் அடங்கியதுதான் பேரரசு. நாங்கள் ஒரு காரியத்தைச் செய்கிறோம் என்றால், மக்களுக்காக ஒரு சாதனை புரிகிறோம் என்றால், மக்களுக்காக ஒரு செயலை முடிக்கிறோம் என்றால், அவர்களுக்காக ஒரு திட்டத்தை வகுக்கிறோம் என்றால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்றால், அதிலே மத்திய அரசை விட்டுவிட்டு செயல் படுத்துவதில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர்கள் எட்டடி பாய்ந்தால் நாங்கள் பதினாறடி பாய்வோம். அந்த எட்டைக் கூட்டித்தான் பதினாறு – நான் அதை மறக்கவில்லை. அந்த எட்டடியையும் கூட்டித்தான் பதினாறடி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் கணக்கிலே அவ்வளவு முட்டாள் அல்ல. அந்த எட்டடியோடு சேர்த்துதான் பதினாறடி பாய்வோம் என்று நான் சொல்லுகிறேன். நாங்கள் தனியாக பதினாறடி பாய்வோம் என்று சொல்லவில்லை. தனியாக பதினாறடி பாயக்கூடும் என்று தான் அண்ணா காலத்திலே அப்படிக் கேட்டோம், நாங்கள் தனியாகப் பதினாறடி பாய வேண்டும் என்று. இல்லையில்லை, சேர்ந்தே பதினாறடி பாய்வோம் என்று சொன்ன பிறகுதான் அவர்களை நம்பி, சேர்ந்தேயிருக்கிறோம். சேர்ந்தே இருப்பது தீது என்று சொன்னால், சொல்லுங்கள்! யோசிக்கிறோம். அவ்வளவுதான் சொல்ல முடியும்.

திராவிட நாடு, தமிழ்நாடு என்றெல்லாம் ஒரு காலத்திலே கேட்ட போது, தமிழ்நாடு தனி, தமிழ்நாட்டின் திட்டங்கள் தனி, பக்கத்து நாடுகளின் திட்டங்கள் தனி, என்ற அந்த அளவிலேதான் எங்களுடைய உரிமை, எங்களுடைய பொருளாதாரத்திற்கு ஏற்ற, பயன்பாடுகளுக்கு ஏற்ற திட்டங்கள் இவைகளெல்லாம் எங்களுக்குத்தேவை என்ற முறையிலே தான் இந்த அரசு – திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே உள்ள இந்த அரசு தொடக்க காலத்தில் அந்தக் கருத்தை வெளியிட்டது. அப்படிச்சொன்ன போது, எங்களுக்கு அளிக்கப்பட்ட அறிவுரை என்ன ?

நாமெல்லாம் ஏக இந்தியா அல்லவா ? ஒரே இந்தியா அல்லவா ? நாங்கள் போடுகிற திட்டங்களும், நீங்கள் போடுகிற திட்டங்களும் மக்களுக்குப் பயன்படக் கூடியவை அல்லவா ? என்று கேட்டு நாங்களும் யோசித்து, ஆமாம்! எங்களால் அதைப் பங்கிட்டுக் கொள்ள முடியவில்லை என்று கேட்டபோது, அதைப் பங்கிட்டுக் கொள்ளக்கூடிய அளவிற்கு நாங்கள் பயனளிக்கிறோம் என்று சொன்னபோது, அதை நம்பித் தான் ஒன்றாக இருக்கிறோம். ஒன்றாக இருப்பதற்குக் காரணமே, நீங்கள் எங்களை என்றைக்கும் வளத்தோடு வாழவைப்பீர்கள் – ஒரு பகுதி வாழ்வதும், ஒரு பகுதி வீழ்வதும் என்ற நிலைமை இந்தியாவிலே இருக்காது. இந்தியா சமமாக இருக்கும்.




இந்தியாவிலே எல்லா பாகங்களும் சமமாக இருக்கும். ஒரு பாகம் உயர்ந்து, ஒரு பாகம் நலிந்திருக்கக்கூடிய நிலைமை இந்தியத் திருநாட்டிலே இருக்காது என்று எண்ணித்தான், நம்பித்தான் இன்றைக்கு தென்னகப் பகுதி, தமிழகப் பகுதி வடக்கே உள்ள பகுதிகளோடு கலந்திருக்கிறது.

ஆனால், இந்தியாவின் ஒருமைப்பாடு, இந்தியாவின் ஒற்றுமை இவைகளெல்லாம் தமிழர்களுக்கு மாத்திரம்தானா என்றால், இல்லை. நாங்களும், நீங்களும் சேர்ந்துதான் இந்தியர்கள். நாங்கள் மாத்திரம் என்றால் தமிழர்கள் அல்லது திராவிடர்கள். நாங்களும் நீங்களும் சேர்ந்து தான் இந்தியர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

**இரண்டும் ஒரே அரசுதான்**

இந்தியர்களுக்காகத் தீட்டப்படுகிற திட்டம் – அது எந்தத் திட்டமாக இருந்தாலும், இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மக்களும் பயன்பெறவேண்டிய திட்டம். இந்தியாவிலே இருக்கின்ற தெலுங்கர்களுக்கான திட்டம் என்றால் அது தனியாக இருக்கலாம். இந்தியாவிலே இருக்கின்ற கன்னடியர்களுக்கான திட்டம் என்றால் அது தனியாக இருக்கலாம். இந்தியாவிலே இருக்கின்ற பஞ்சாபிகளுக்கான திட்டம் என்றால் அது தனியாக இருக்கலாம். ஆனால், எல்லாம் சேர்ந்த இந்தியர்களுக்கான திட்டமென்றால், அதிலே பாகுபாடு இருக்க முடியாது, இருக்கக்கூடாது. இருந்தால், இந்தியாவிலே பல மாநிலங்களை, பல பிரதேசங்களை, பல இனங்களை அவமதித்த குற்றத்திற்கு நாம் ஆளாவோம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அந்த வகையிலே இது யாருடைய திட்டம், இது மாநில அரசின் திட்டமா ? மத்திய அரசின் திட்டமா ? என்றெல்லாம் சில பேர் குழப்பி, மாநில அரசின் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசின் திட்டங்களாகத்தான் இன்றைக்கு இருக்கின்றன என்று யாராவது சொல்லுவார்களேயானால், மாநில அரசுத் திட்டங்களும் மத்திய அரசின் திட்டங்கள்தான் என்று மக்களைக் குழப்ப முன்வருவார்களேயானால், நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன் – நாங்கள் திட்டவட்டமாக, தெளிவாக இதிலே இருப்பதற்கு எங்களுக்கு தயவு செய்து வழிவிடுங்கள். இதைத்தான் நான் சொல்ல முடியும்.

மத்திய அரசு வேறு, மாநில அரசு வேறு என்று நான் கருதாத காரணத்தால், இரண்டும் ஒரே அரசுதான் – மத்தியிலே ஒரு காரியம் நடந்தால் அது மாநிலங்களைப் பாதிக்கக் கூடியதுதான் என்பதை நான் எண்ணுகிறவன், யோசிப்பவன், சிந்திப்பவன். அதனால் தான், இரண்டையும் ஒரே அரசாகக் கருதுகிறேன்.

மாநிலம், மத்தி என்பதெல்லாம் நிருவாக வசதிக்காக பிரிக்கப்பட்டவைகள். அதற்காக இன்றைக்கு இருக்கக் கூடியவைகள். அதை மறந்துவிடக்கூடாது. மாநிலம் – மத்தி என்ற இந்த இரண்டு தத்துவங்களும் நிருவாகத்திற்காக இருப்பவைகளே தவிர, பேதங்களுக்காக அல்ல, பிளவுகளுக்காக அல்ல என்பதை அரசியல் சிந்தனையாளர்கள் நிச்சயமாக மறந்துவிடக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால்தான் உங்களுக்குச் சொல்கிறேன். படித்த மக்கள் நீங்கள், வேளாண் துறையிலே பணியாற்றுகின்ற நீங்கள், இவைகளையெல்லாம் சிந்திக்க முடியாதவர்கள் அல்ல, சிந்திக்கக் கூடியவர்கள். அப்படிச் சிந்திக்கக்கூடியவர்கள்

இருக்கின்ற இந்தக் கூட்டத்தில் உங்களுடைய சிந்தனைக்கு கொஞ்சம் எரு போட்டதைப் போல, தீனி போட்டதைப் போல இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன்.

உங்களுக்கே இது பயன்படுமேயானால், உங்களையும் என்னையும் சேர்த்து ஆளுகின்றவர்களுக்கு – மாநிலத்திலே இருந்து ஆளுகின்றவர்களுக்கு, ஏன் மத்தியிலும் இருந்து ஆளுகின்றவர்களுக்கு – அப்படி ஆளுகின்ற கட்சிகளுக்கு – மாநிலத்தை, மத்திய அரசை ஆளுகின்ற கட்சிகளிலே உள்ளவர்களுக்கு இது புலப்படாமல் போக முடியாது. எனவே, எந்த ஒரு திட்டம் ஆனாலும், வேளாண்மைத் துறைக்காகப் போடப்படுகிற திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டத்திலும் மத்திய அரசின் பங்கு இருக்கிறது. அதைப் போலவே, மத்திய அரசு திட்டத்தில் மாநில அரசுக்குப் பங்கு இருக்கிறது.

ஒரு குழந்தையை நான்தான் பெற்றேன் என்று தாய் உரிமை கொண்டாடினால்கூட, அதிலே தந்தைக்குப் பங்கில்லாமல் இல்லை. தந்தைக்கும் பங்கு இருக்கிறது.

ஒரு குழந்தையை தன்னுடைய குழந்தை என்று இரண்டு தாய்கள் அதற்காகப் போராடிய போது, சாலமன் காலத்திலே அவருடைய சபா மண்டபத்தில், சாலமன் என்ற அந்த மன்னன் தீர்ப்பு கூறினான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் – இது உன்னுடைய குழந்தை அல்ல, அந்த அம்மாவுடைய குழந்தை, அந்த அம்மாதான் கண்ணீர் வடிக்கிறார்களே, கொடுத்துவிடு என்றபோது – இன்னொருத்தி, முடியாது என்றாள். பிறகு யோசித்துப் பார்த்து, கடைசியாக முடிவு செய்தான் – சரி, இந்தக் குழந்தையை என்னுடைய வாளால் வெட்டி, இரண்டு துண்டாக்கி, ஆளுக்கொரு துண்டு கொடுக்கிறேன். எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொன்ன போது, அந்த போலித்தாய், சரி, சரி என்றாள். ஏனென்றால், குழந்தையைத் துண்டாக்கினால் என்ன, அதைத் துண்டு துண்டாக ஆக்கினால் என்ன, கவலையில்லை. ஏனென்றால், அவள் உண்மையான தாய் அல்ல. அதே நேரத்தில், உண்மையான தாய் என்ன சொன்னாள்? அய்யோ! குழந்தையைத் துண்டாக்காதீர்கள். அது என் குழந்தை. வெட்டி விடாதீர்கள். வேண்டுமானால் குழந்தையை அவளிடமே கொடுத்து விடுங்கள். குழந்தை உயிரோடு இருந்துவிட்டுப் போகட்டும். அவளிடத்திலே கொடுத்து விடுங்கள். அவளே தாயாக இருந்து விட்டுப் போகட்டும் என்று சொன்னாள். அதற்கு என்ன காரணம்? குழந்தை உயிரோடு இருக்க வேண்டும். அதுதான் அந்த உண்மையான தாயின் சிந்தனை.

**இந்தியா சுதந்திரம் காப்பற்றப்பட வேண்டும்**

அதைப் போல, அந்த தாயின் நிலையிலிருந்து நான் சொல்லுகிறேன். யாராவது இருந்துவிட்டுப் போகட்டும், யார் வீடு கட்டினால் என்ன, யார் ரோடு போட்டால் என்ன, யார் செய்தால் என்ன, யார் 108 திட்டத்தை யார் நிறைவேற்றினால் என்ன, யார் பல்கலைக் கழகங்களை நடத்தினால் என்ன, யார் வேளாண்மைத்துறையை வகித்தால் என்ன – மக்களுக்கு திட்டங்கள் பயன்பட்டால் போதும். அது பயன்படுகிற வரையில், அது எனக்கு, உனக்கு என்றெல்லாம், நான்தான் அதைச் செய்தேன் என்றெல்லாம் சொல்வது, நான்தான் பெற்றேன் என்று போலித்தாய் பங்குக்கு வருவது போன்ற கதையாகிவிடும். குழந்தை காப்பாற்றப்பட வேண்டும் – இந்தியாவினுடைய சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும் – இந்தியாவினுடைய சுதந்திரத்தை காத்து, அதை வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேளாண்மைத்துறை அன்பர்கள் கூடியிருக்கின்ற இந்தக் கூட்டத்தை ஒரு பயிற்சி வகுப்பாக நான் ஆக்கிவிட்டேனோ, என்ற அந்த வருத்தத்தோடு, அந்த வருத்தத்திலும் ஒரு "அர்த்தம்" இருக்கிறது என்பதை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்த்து அதற்கேற்ப நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உங்களுடைய இனிய வரவேற்பு, எழுச்சி மிகுந்த வாழ்த்துகள் இவற்றுக்காக மீண்டும் மீண்டும் நன்றி கூறி, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் கோரிக்கைகள் முழுவதும் இன்று நிறைவேறாவிட்டாலும்கூட, அவரும் அமரக் கூடிய அமைச்சரவைக்கூட்டத்திலே, இந்த நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகள் ஆழ்ந்த பரிசீலனையோடு அமலாக்கப்படும். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

துணை முதலமைச்சர் இன்றைக்கு முன் நின்று நடத்தும் காரியமாக ஏழை, எளியவர்க்கு இலட்சக்கணக்கான வீடுகள் கட்டுவதற்கான கலைஞர் வீடு வழங்கும் திட்டம் – துணை முதலமைச்சர் அவர்கள் முன் நின்று இன்று நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு மாபெரும் திட்டம். அதன்படி, 21 இலட்சம் வீடுகள் 6 ஆண்டுக் காலத்திலே கட்டப்பட வேண்டும். இந்த முதல் வருடத்திலே 3 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன. அநேகமாக முடிக்கப்படப்போகிறது. அவ்வளவு வீடுகள் வேகமாக கட்டப்பட்டு வருகின்றன. ஆனால், அதே நேரத்தில் அழுத்தமாக, உறுதியாகக் கட்டப்படுகின்றன. அதைத் தொடர்ந்து அடுத்த கட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. மொத்தம் 21 இலட்சம் குடிசை வீடுகள் கல் வீடுகளாக, கான்கிரீட் வீடுகளாக ஆக இருக் கின்றன. 6 வருடங்களில் – 6 வருடங்களா, அவர்கள் வந்து செய்வார்களா என்றால் வரமாட்டார்கள், கவலைப் படாதீர்கள் நாமே அதை செய்து முடிப்போம் என்று சொல்லி முடிக்கின்றேன்.

❖ ❖ ❖

# மக்களை நேரில் சென்று சந்தித்து பணியாற்றுபவர்கள், அந்த உணர்வோடு பணியாற்றி வேளாண் மக்களுக்கு நன்மைகளை செய்திட வேண்டும்

**24–11–2010** அன்று வேளாண் கருத்தரங்கம் மற்றும்
அலுவலர்கள் மாநாட்டில்
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கலந்து கொண்டு
ஆற்றிய தலைமையுரை.

**த**லைவர் கலைஞர் அவர்கள் செம்மொழி பூங்காவினை திறந்து வைத்ததற்கு பின்னர், வள்ளுவர் கோட்டத்தில் எழுச்சியோடு நடைபெறும் வேளாண் கருத்தரங்கம் மற்றும் அலுவலர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். செம்மொழி பூங்கா திறந்து வைக்கப்பட்டதில் இங்கு உள்ளவர்களை விட எனக்குத் தான் மிகப்பெரிய பெருமை என்று சொன்னால் அது மிகையாகாது. ஏன் என்றால் செம்மொழி பூங்கா அமைந்துள்ள இடம் என்னை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுத்த ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ளது என்பது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்த பெருமைமிகு விழாவிற்கு தலைமை ஏற்கும் வாய்ப்பை வழங்கிய வேளாண்மை துறை அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், இங்கு எழுச்சியோடு கூடியுள்ள வேளாண்மை துறை அலுவலர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

''சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழுந்தும் உழவே தலை''

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த் தொழிலின்



பின்னர்தான் சுற்ற வேண்டியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே, எவ்வளவு தான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே தலை சிறந்தது என்று அய்யன் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். இந்தியா ஒரு வேளாண்மை நாடு. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு என பல ஆண்டு காலமாக கூறிவருகிறோம். வேளாண்மைத் தொழிலானது நாட்டின் முதன்மையான தொழிலாகவும், ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கான தொழிலாகவும் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இங்கு பேசிய நிதித்துறை செயலாளர் அவர்கள் இந்தியா தான் உலகிலேயே வேளாண்மையில் சிறந்து விளங்குகிறது என்று பெருமையோடு குறிப்பிட்டார். வேளாண்மையின் சிறப்புகளை நாம் எல்லாம் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக விளக்கி கூறினார். ஏன் என்றால் நிதித்துறை செயலர் சண்முகம் அவர்கள் வேளாண் துறையில் பட்டம் பெற்றவர். தலைவர் கலைஞர் அவர்கள் 5ஆம் முறையாக பொறுப்பேற்று வேளாண் தொழில் முதலீடுகளை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். இப்போது மட்டும் அல்ல எப்போதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பில் உள்ளாரோ அப்போதெல்லாம் பல்வேறு சாதனைகளை வேளாண்துறைக்கு செய்து வருகிறார். 1971ஆம் ஆண்டில் கழக அரசில் இந்தியாவிலேயே முதன்முறையாக "குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தை" கொண்டு வந்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் வீட்டுமனைகள் அவர்களுக்கே தலைவர் கலைஞர் அவர்கள் சொந்தமாக்கினார். இந்த சட்டம் குறித்து திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற பாராட்டு கூட்டத்தில் முதுபெரும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மணலி கந்தசாமி அவர்கள், 'பல ஆண்டுகளாக ரத்தம் சிந்தியும் சாதிக்க முடியாததை ஒரு துளி மையினால் சாதித்துக் காட்டியுள்ளார் கலைஞர்' எனப் பாராட்டினார். 1989ஆம் ஆண்டுக்கு முன்னாள் விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் விவசாயிகள் எல்லாம் ஒன்று கூடி மின்சாரக் கட்டணத்தை ஒரு பைசா குறைக்க வேண்டும் எனக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால், அப்போதிருந்த ஆட்சியாளர்கள் அவர்களுடைய கோரிக்கையை ஏற்கவில்லை. 1989ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று சட்டமன்றத்தில் விவசாயிகளான நீங்கள் என்னிடம் கோரிக்கை வைக்கவில்லை. ஊர்வலமாக வந்து மனு அளிக்கவில்லை என்றாலும், ஒரு பைசா குறைக்க போராடிய உங்களுக்கு ஒரு பைசா கட்டணம் கூட இல்லாமல் இலவச மின்சாரம் வழங்கப்படும் என விவசாயிகளின் மனம் குளிர அறிவித்தவர் தான் தலைவர் கலைஞர் அவர்கள். 2006 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலின் போது விவசாயிகளின் கூட்டுறவு கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று தேர்தல் வாக்குறுதியாக அளித்தார். பின்னர் 5ஆம் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், பதவி ஏற்ற விழா மேடையிலேயே தேர்தல் அறிவிப்பான விவசாயிகள் கடன் ரூ.7 ஆயிரம் கோடியினையும் தள்ளுபடி செய்து அதற்கான உத்தரவில் கையெழுத்திட்டார். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் எங்களிடம் கடன் வாங்கியவர்களை நான் கட்சியை வைத்து பிரித்து பார்க்கவில்லை. அனைவரையும் விவசாய பொருமக்களாகவும், என்னுடைய இனத்தை சோர்ந்தவர்களாகவும் தான் பார்க்கிறேன் என்று கூறினார். இதுபோல் விவசாய பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். இன்று நடக்கும் வேளாண் அலுவலர்கள் கருத்தரங்கம் மற்றும் மாநாட்டிற்கும் நேரடியாக வந்து உரையாற்ற உள்ளார். உங்கள் அனைவரின் சார்பில் வேளாண்மைத்துறை அமைச்சர் பல கோரிக்கைகளை வைத்துள்ளார். அனைத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றுவார் என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். பிறத் துறைகளை போல் அல்லாமல், வேளாண்துறை அதிகாரிகள் மக்களை நேரில் சென்று சந்தித்து பணியாற்றுபவர்கள், அந்த உணர்வோடு பணியாற்றி வேளாண் மக்களுக்கு நன்மைகளை செய்திட வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன் நன்றி வணக்கம். ★

# தமிழக அரசின் சார்பில்
# அன்னை தெரசா
# நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்

சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே 1.11.2010 அன்று நடைபெற்ற
மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான அன்னை தெரசா மகளிர் வளாகம் திறப்பு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு !

இந்த இனிய மாலை நேரத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் தொகுப்பாக ஆற்றியிருக்கின்ற பணிகளை எல்லாம் நினைவுகூர்ந்திடவும், இன்னும் மேலும் ஆற்றவிருக்கின்ற பணிகளுக்கான விதை நடவும், நாம் இந்த இனிய நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்ற வாய்ப்பைப் பெற்று, உங்களுடைய ஆதரவை – உங்களுடைய அன்பை – உங்களுடைய வாழ்த்துகளைப் பெறுகின்ற ஒரு நிலையில்; இந்த விழாவிலே கலந்துகொண்டு, இந்த அருமையான – எழில் ததும்புகிற மாளிகையை – வளாகத்தை – அதுவும், அன்னை தெரசா பெயரில் அமைந்திருக்கின்ற வளாகத்தை – திறந்து வைப்பதிலே மிகுந்த பெருமையடைகின்றேன்; மகிழ்ச்சியடைகின்றேன்.




இந்த வளாகத்திற்கு என்ன பெயர் வைப்பது என்ற வினா எழுந்தபோது, எனக்கு நினைவுக்கு வந்தது. ''அன்னை தெரசா'' அவர்களுடைய பெயர் என்பதை தம்பி ஸ்டாலின் இங்கே எடுத்துச் சொன்னார். அந்த நினைவுகூட எனக்கு எப்படி வந்தது என்றால்; அன்னை தெரசாவினுடைய நூற்றாண்டு விழாவை – கழகத்திலே நம்முடைய கழக அரசின் சார்பில் கொண்டாட வேண்டுமென்று நானும், அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசிக் கொண்டிருந்த மறுநாளைக்கு மறுநாள் இந்தக் கட்டடத்திற்கான திறப்பு விழா பற்றிய செய்தி வந்த காரணத்தால் அந்தப் பேச்சின் தொடர்ச்சியாக, இந்தக் கூடத்திற்கு ஏன் அன்னை தெரசாவினுடைய பேரையே வைக்கக்கூடாது என்று எழுந்த ஆவலின் காரணமாக, இந்தப் பெயர் இன்றைக்கு

அமைந்திருக்கிறது என்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**1989இல் மகளிர் சுயஉதவிக் குழு தொடக்கம்**

இந்த விழா, சென்னை மாநகரில் – ஒரு பெரிய கட்டடத்தை அமைத்திருக்கிறோம் என்ற அந்த பெரும் உணர்ச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. என்னை பொறுத்தவரையில், இங்கே தம்பி தயாநிதி மாறன் எடுத்துக் காட்டியதைப்போல், மறைந்த கழகத்தினுடைய மாமேதைகளில் ஒருவராகத் திகழ்ந்த தம்பி முரசொலி மாறன் – மகளிர் சுயஉதவிக் குழுக்களை நாம் அமைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னதன் காரணமாக, 1989ஆம் ஆண்டு தருமபுரியிலே இந்தச் சுயஉதவிக் குழுவிற்கான தொடக்க விழா நடைபெற்று – இன்றைக்கு இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, ஏறத்தாழ 4 இலட்சத்து 74 ஆயிரத்து 874 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்படுகின்ற அளவிற்கு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றோம்.

இந்த குழுக்களிலே இருக்கின்ற ஏழை மகளிர் எத்தனை பேர் என்பதை எண்ணும்போது, பெருமையாக இருக்கிறது. 73 இலட்சத்து 60 ஆயிரம் ஏழை மகளிர் குழுக்களிலே உறுப்பினர்களாக இன்றைக்கு இருக்கின்றார்கள். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையை மேம்படுத்திடவும், சென்னை மாநகரில் ஒரு நிரந்தரமான விற்பனை வளாகத்தை அமைத்திட வேண்டும் என்ற நோக்கத்திலும் அன்னை தெரசா மகளிர் வளாகம் உருவாக்கப்பட்டு – உள்ளாட்சி மன்றங்களின் நாளான இந்நாளில் இந்த மாளிகை திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

**துணை முதலமைச்சரின் உழைப்பு**

இந்த மன்றங்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை அவ்வப்போது, அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து, செயலாற்றி, இத்தகைய பெருவளர்ச்சியை இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பெறுவதற்குக் காரணமாக இருந்து இதனை வளர்த்திருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமேயானால், தமிழகத்திலே இன்றைக்கு ஆல்போல் தழைத்திருக்கின்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் காரணமாக – இதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது இன்றைய துணை முதலமைச்சருடைய உழைப்புதான் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

கழக ஆட்சி மகளிர் முன்னேற்றத்திற்கு – மகளிர் உரிமைகளுக்கு எப்படியெல்லாம் துணை நிற்கும் – துணை நின்றது என்பதை எனக்கு முன்னாலே இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1973ஆம் ஆண்டில், கழக ஆட்சியில் தமிழகக் காவல்துறையில் முதன்முதலாக பெண் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். அப்போது திரு.அருள் அவர்கள் ஐ.ஜி.யாக இருந்தார். அந்த நேரத்திலேதான் பெண்களைக் காவல்துறையிலே சேர்க்க வேண்டும்; அவர்களைப் பயன்படுத்திட வேண்டும் என்று எண்ணம் கொண்டு; அதற்கு ஐ.ஜி. அருள் அவர்களும் தன்னுடைய ஆதரவைத் தந்து, முயற்சி மேற்கொண்டு அப்போது தமிழகக் காவல்துறை பெண்களை உள்ளடக்கியதாக அமைந்தது. அதனுடைய வளர்ச்சி இன்றைக்கு எங்கே வந்திருக்கிறது என்றால் , அந்த துறையினுடைய தலைமை இயக்குநராக (டிஜிபி) ஒரு பெண்மணியே பொறுப்பேற்றிருகின்றார்கள். அந்த அளவிற்குக் காவல்துறையிலே பெண்களுக்குச் சுதந்திரம்; பெண்களுக்கு உரிமை; பெண்களுக்கு வாய்ப்பு வழங்கியுள்ள ஆட்சி இந்த ஆட்சி ஆகும்.

**பெண்களுக்கு சொத்துரிமை**

காவல்துறையிலே மாத்திரமல்ல; தமிழகத்தைக் காக்கும் துறையான தலைமைச் செயலகத் துறையிலேயே ஒரு பெண்மணிதான் இன்றைக்குத் தலைமைச் செயலாளராக இருக்கிறார். உள்ளபடியே தமிழகத்தில் இது போற்றத்தக்க, புகழத்தக்க ஒரு சம்பவம். தலைமைப் பொறுப்பிலே உள்ள அதிகாரிகள் இரண்டு பேரில் – ஒரு பெண்மணி தலைமைச் செயலாளராகவும், இன்னொரு பெண்மணி காவல்துறைக்குத் தலைமை இயக்குநராகவும் இருப்பதை எண்ணி எண்ணி நாமெல்லாம் மகிழலாம். மகிழ முடியாதவர்கள் வேண்டுமானால் கோர்ட்டுக்குச் செல்வார்கள். அது பெண் மக்கள் முன்னேற வேண்டும் என்கின்ற கருத்துடையவர்களால் செய்யப்படுகின்ற காரியமா என்பதை – அவர்களை ஆதரிக்கின்ற இதழாளர்கள், ஏட்டாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று, மகளிருக்கான வளாகத்தை – மாளிகையைத் திறந்துவைத்திருக்கின்ற இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக – மற்றவர்கள் யாரும் வருத்தப்படக்கூடாது – இந்தியாவிலேயே முதன்முதலாக என்றால், பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குக் கோபம் வந்தாலும் வரும். ஏனென்றால்,




ஒரு சிறந்த தேசிய கட்சியைச் சேர்ந்த ஒரு பெருந்தொண்டர் அவர்; திறமைமிக்க முன்னணி வீரர் அவர். அதனால்தான் சொல்கின்றேன். இந்தியாவிலேயே கழக ஆட்சியில்தான் முதல்முறையாக பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கப்பட்டது. வழங்கியது மாத்திரமல்ல; அதற்கென ஒரு தனிச் சட்டம் நிறைவேற்றி, பெண்களுக்கு ஒரு தனிச் சிறப்பை வழங்கியது.

அதுமாத்திரமல்ல, இந்தியாவிலேயே முதல்முறையாக அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் கழக ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்பட்டு; பல்லாயிரக்கணக்கான பெண்கள் அரசு வேலைவாய்ப்பினைப் பெற வழி வகுக்கப்பட்டது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான், இந்தியாவிலேயே முதல்முறையாக உள்ளாட்சி அமைப்புகளிலே மகளிர்க்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி அடித்தளம் அமைத்தோம் என்பதையும் – ஏறத்தாழ 40 ஆயிரம் மகளிர், தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்புகளை ஏற்று ஜனநாயகக் கடமைகளை ஆற்றி வருகின்றார்கள். அரசியல் விழிப்புணர்வையும் பெற்று வருகின்றார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அந்த வகையிலே, இந்த மகளிர் குழுக்கள் எல்லாவிதமான பெருமைகளையும் பெற்றுள்ள குழுக்களாகும். நான் இங்கே தரப்பட்ட மலரைப் புரட்டிப் பார்த்துவிட்டு, துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலினிடத்திலே அதிலேயுள்ள சில படங்களைச் சுட்டிக்காட்டி – "இந்தப் படம் மிக அருமையாக இருக்கிறது; அது மரத்தால் செய்யப்பட்ட – மகளிர் உழைப்பால் – மகளிர் திறமையால் செய்யப்பட்ட சில படங்கள் – சில கட்டடங்கள்; சில பொம்மைகள், இவைகளெல்லாம் மகளிருடைய திறமையால், மகளிருடைய உழைப்பால் செய்யப்பட்டவை'' என்று சொல்லிவிட்டு, "மரத்தால் செய்யப்பட்ட இந்தக் கட்டடத்தினுடைய பொம்மை ஒன்றை நம்முடைய புதிய சட்டப்பேரவைக் கட்டிடத்திலே வைக்க வேண்டும்'' என்றும் நான் தம்பி ஸ்டாலினிடத்திலே சொல்லியிருக்கின்றேன். அவ்வளவு நேர்த்தியாக – அவ்வளவு அழகானதாக – அவ்வளவு மேன்மையுள்ளதாக – அந்தச் சிற்பங்களை அவர்கள் செய்திருப்பதைப் பார்க்கும்போது, நான் உள்ளபடியே வியப்படைகின்றேன்.

**வலிமை பொருந்திய சேனை**

இந்தச் சிற்பிகள் பெண்களாக – அதிலும், இந்த மகளிர் குழுக்களைச் சேர்ந்த பெண்களாக இருப்பதை எண்ணும்போது, நான் மிகுந்த மகிழ்ச்சியோடு என்னுடைய

**நாம் பெண்களை மதிப்பவர்கள்; பெண்களைப் பாராட்டுகின்றவர்கள்; பெண்களுக்கு எல்லாவிதமான உரிமைகளையும் தரக்கூடியவர்கள்; அவர்களுக்கு வணக்கம் தெரிவிக்கக்கூடியவர்கள்; அவர்களை வாழ்த்தக் கூடியவர்கள் என்பதற்கு அடையாளம்தான்; மகளிர் சமுதாயத்திற்காக – பெண்கள் சமுதாயத்திற்காக என்று மாத்திரமல்ல; ஆண்களும் உள்ளிட்ட ஏழையெளியோர் சமுதாயத்திற்காக – நலிவடைந்த மக்களுக்காக – அவர்களுடைய நலனை அடிப்படையாக வைத்து நாளும் தொண்டாற்றிய – மறைந்தும் மறையாத மாதரசு அன்னை தெரசா அவர்களுடைய பெயரால் – அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில் – அந்த நூற்றாண்டு நாள் விழா தமிழக அரசின் சார்பாகவே கொண்டாடப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.**

வாழ்த்துகளை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது ஏறத்தாழ 73 இலட்சம் பேர் தமிழகத்திலே இந்தக் குழுக்களிலே செயல்படுகிறார்கள் என்றால், இந்த 73 இலட்சம் பேரும் சாதாரணமானவர்கள் அல்ல; சாதாரண, சாமன்ய மக்களைச் சார்ந்தவர்கள் என்றாலும்கூட, அவர்கள் இந்தக் குழுவிலே இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவர்களைத் தனித்தனியாக மகளிர் என்றும் யாரும் கருதாமல், அவர்களெல்லாம் ஒரு பெரும் சேனை; பெரிய பட்டாளம்; பெரும் படை அந்தப் படை தமிழ்நாட்டில் பெண்களுடைய முன்னேற்றத்திற்கு – பெண்களுடைய எழுச்சிக்கு – பெண்களுடைய எதிர்காலத்திற்கு வழிவகுக்கக்கூடிய – எத்தகைய இடையூறுகள் வந்தாலும், அவற்றை வென்று நிற்கக்கூடிய – வலிமை பொருந்திய சேனை என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

அப்படிப்பட்ட படை வலிமையால், இன்றைக்கு இந்த மகளிர் குழு – இவ்வளவு பெரிய அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதையும் – இந்த வளர்ச்சிக்குக் காரணமான தம்பி ஸ்டாலின் உட்பட மற்ற அனைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பெண்களை மதிப்பவர்கள்; பெண்களைப் பாராட்டுகின்றவர்கள்; பெண்களுக்கு எல்லாவிதமான உரிமைகளையும் தரக்கூடியவர்கள்; அவர்களுக்கு வணக்கம் தெரிவிக்கக்கூடியவர்கள்; அவர்களை வாழ்த்தக் கூடியவர்கள் என்பதற்கு அடையாளம்தான்; மகளிர் சமுதாயத்திற்காக – பெண்கள் சமுதாயத்திற்காக என்று மாத்திரமல்ல; ஆண்களும் உள்ளிட்ட ஏழையெளியோர் சமுதாயத்திற்காக – நலிவடைந்த மக்களுக்காக – அவர்களுடைய நலனை அடிப்படையாக வைத்து நாளும் தொண்டாற்றிய – மறைந்தும் மறையாத மாதரசு அன்னை தெரசா அவர்களுடைய பெயரால் – அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில் – அந்த நூற்றாண்டு நாள் விழா தமிழக அரசின் சார்பாகவே கொண்டாடப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்னை தெரசா ஒரு தாய்தான். அவர் இந்தியாவிலே பிறக்காத ஒரு தாயாக இருக்கலாம். வெளிநாட்டிலே பிறந்து – இந்திய மக்களுக்காகப் பாடுபட்ட ஒரு தாயாக இருக்கலாம். எங்கே பிறந்தாலும், தாய் தாய்தான். அப்படிப்பட்ட அன்னைக்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவோம்; ஆற்றுகின்ற நேரத்திலே அவர் வழிநின்று நடப்போம் என்ற சூளுரையை மேற்கொள்வோம் என்பதை இங்கே எடுத்துக்காட்டி, “அன்னை தெரசா வாழ்க! அவருடைய பெயரால் இங்கே அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் நல்ல பல காரியங்கள் விளைந்திடுக! அந்தக் காரியங்கள் விளைந்திட ஊக்கத்தோடு செயலாற்றிடுக! என்று இதற்குக் காரணமான அனைவரையும் பாராட்டி வாழ்த்தி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

# மாநில அளவில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய நிரந்தரக் கட்டடம்

**சென்னையில் 1.11.2010 அன்று நடைபெற்ற
அன்னை தெரசா மகளிர் வளாகத் திறப்பு விழாவில்
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.**




இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களே, தாய்மார்களே, நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கத்தை முதலில் தெரிவித்து கொள்கிறேன். மகளிர் சுயஉதவிக் குழுவிற்காக மாநில அளவில் தனிக்கட்டடம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு அன்னைதெரசா அவர்களின் பெயரினை சூட்டி அதனை இன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து பெருமை சேர்த்துள்ளார். இந்த மகளிர் வணிக வளாகத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கி நிதியாக ரூ.8 கோடியே 29 இலட்சமும், தமிழக அரசின் நிதியாக ரூ.7 கோடியே 3 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.15 கோடியே 32 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த எழில்மிகு வளாகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது திருக்கரங்களால் திறந்து வைத்துள்ளார். மேலும், இந்நிகழ்ச்சியில் 8 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனும், இரண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் உதவியும் என ரூ. 2 கோடி கடன் உதவியினை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிட உள்ளார். மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி கடந்த ஆண்டு சென்னையில் நடத்தப்பட்டு அதன் மூலமாக ரூ.2 கோடியே 99 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**கண்காட்சியின் மூலமாக பொருட்கள் விற்பனை**

இந்த ஆண்டை பொறுத்தவரை மூன்று இடங்களில் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஒரு மாதத்தில் ஒரு கோடியே 87 இலட்சத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது உள்ளபடியே மிகுந்த பெருமைக்குரிய ஒன்றாகும். இதேபோன்று மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் கண்காட்சியின் மூலமாக ரூ.17 கோடியே 52 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தின் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை




செய்வதற்கு ஏதுவாக மாவட்ட அளவில் 29 வணிக வளாகங்களும், மேலும் 22 கூடுதல் வணிக வளாகங்களும் 256 கிராம அங்காடி வணிக வளாகங்களும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதைத்தவிர தற்போது மேலும் 90 கிராம அங்காடி வணிகவளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மாநில அளவில் மகளிர் சுயஉதவி குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்கின்ற வகையில் நிரந்தரமாக தற்போது கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் கண்காட்சி அமைக்கப்பட இருக்கிறது.

**தங்க காசும் தாலியும்**

இந்த வணிக வளாகம் கட்டுவதற்கான அறிவிப்பு 2007இல் செய்யப்பட்டு, இன்று அதனை நிறைவேற்றி வைக்கின்ற வகையில் இந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பான முறையில் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்திருக்கின்றார். நாங்கள் இக்கட்டடத்தை திறந்து வைப்பதற்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் தேதியினை கேட்டபோது முதல்வர் கலைஞர் அவர்கள் உடனடியாக அதற்கு ஒப்புதல் தந்து உள்ளாட்சி தினமான நவம்பர் ஒன்றாம் தேதி திறப்பதற்கான இசைவினை வழங்கினார்.

எங்களிடம் தேதியினை வழங்குகின்றபோது வணிக வளாகத்திற்கு என்ன பெயர் சூட்டியுள்ளீர்கள் என்று கலைஞர் அவர்கள் கேட்டார். அதற்கு நாங்கள் இன்னும் பெயர் வைக்கவில்லை என்று குறிப்பிட்டோம். உடனே தலைவர் கலைஞர் அவர்கள் அன்னை தெரசா பெயரை இந்த மகளிர் வணிக வளாகத்திற்கு சூட்ட வேண்டும் என்று தெரிவித்தார். அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடி வருகின்ற இந்த தருணத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் அன்னை தெரசா அவர்களின் பெயரை சூட்டி பெருமை சேர்த்துள்ளார் தலைவர் கலைஞர்.

அன்னை தெரசா அவர்கள் சமூகம் எனக்கென்ன செய்தது என்று கேட்காமல் இச் சமுதாயத்திற்கு நான் என்ன செய்தேன் என்ற கொள்கையின் அடிப்படையில் அயராது ஏழை எளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனாதைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் உறுதுணையாக இருந்து ஓயாமல் பணியாற்றியவர். அன்னை தெரசா அவர்கள் ஒருமுறை தமிழகத்திற்கு வருகை தந்தபோது அவரை ஹென்றி இசிதோர் என்பவர் வரவேற்று தங்ககாசு மாலையினை அணிவித்தார். அதை ஏற்றுக் கொண்ட அன்னை தெரசா அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? இந்த தங்க காசுகளை நான் பல ஏழை பெண்களுக்கு தாலி செய்ய பயன்படுத்திக் கொள்வேன் என்று தெரிவித்தார்.

**இந்தியாவில் வேறு எங்குமில்லாத திட்டங்கள்**

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களும் முனைப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு தமிழகத்தில் முதன்முதலில் சுயஉதவிக் குழுக்களை தோற்றுவித்தவரும் கலைஞர்தான். பெண்களுக்கு ஆண்களை போல சொத்தில் சம உரிமை வழங்க வேண்டும் என்று சட்டம் இயற்றி தந்தவரும் கலைஞர்தான். பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கியதும், கர்ப்பிணி பெண்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.6 ஆயிரம் வழங்கி வருவதும், ஏழை பெண்கள் திருமண உதவிக்காக நிதி உதவி வழங்குவதும் கலைஞர்தான்.

ஏழை பெண்கள் திருமண உதவித் திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரையிலும் கூட நடைமுறையில் இல்லை. பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகின்ற இந்த அரசிற்கு, பெண்களை போற்றும், பெண்களின் வாழ்க்கையை வளமாக்கும் வகையில் தொடர்ந்து உழைக்கின்ற தலைவர் கலைஞர் அரசிற்கு நீங்கள் எல்லாம் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும், மேலும் சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள இந்த வணிக வளாகத்தை சுய உதவிக்குழுவினர் நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். ✶

# தொழிலாளர்களுக்குத் தொண்டாற்றும் உள்ளத்தை இளமையிலேயே பெற்ற நான் உங்களது தோழன் - தொண்டன் எனும் முறையில் என்றென்றும் உங்களோடு இருப்பேன்!




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 30.10.2010 அன்று தமிழ்நாடு கட்டுமான உயர் பயிலகம் (TAC) அடிக்கல் நாட்டு விழா மற்றும் அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

தமிழ்நாடு கட்டுமான உயர் பயிலகத்தினுடைய அடிக்கல் நாட்டு விழாவும், அதனோடு சேர்ந்து அமைப்புசாராத் தொழிலாளர்கள் நன்றி அறிவிக்க விரும்பிக் கூடியுள்ள இந்த விழாவும், மிகப் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விழாவைக் காண மழையும் வந்து இந்த மண்டபத்தின் சாளரங்கள் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என்று சிலப்பதிகாரத்திலே ஒரு அழகான வரி. இந்த மழை நாம் விரும்புகின்ற நேரத்தில் வந்திருக்கிறது. சில பேர் எண்ணிக் கொண்டிருந்தார்கள் – மழையுமில்லை; ஆறுகளில் தண்ணீரும் இல்லை; வயல்களில் விளைச்சலும் இல்லை; எல்லாம் வறண்டு போய் இந்த ஆட்சிக்கு சரியான சாபம் கிடைக்கும்; எதிர்ப்பு கிளம்பும் என்றெல்லாம் எண்ணியிருந்த வேளையில், எல்லோரையும் முந்திக் கொண்டு – "நானிருக்கிறேன் தமிழ்நாட்டு மக்களுக்கு உதவ" என்று மழை வந்து, அணைகள் நிரம்பி – தண்ணீர் விடமாட்டேன் என்று சொன்ன கருநாடகம் கூட, விட்டுத்தான் தீரவேண்டும் என்கிற நிலைமைக்கு மழை பொழிந்து, நாம் – நம்முடைய நன்றியை மழைக்கும் தெரிவிக்க வேண்டியவர்களாக இங்கே கூடியிருக்கின்றோம்.

## மாமழை போற்றதும்

நீங்கள் எனக்கு நன்றி தெரிவிக்க அழைப்பு விடுத்தீர்கள். நான் – என் சார்பாக மாத்திரமல்ல; உங்கள் சார்பாக – தமிழர்கள் சார்பாக – தமிழ்நாட்டு மக்களின் சார்பாக – குறிப்பாக உழவர்களின் சார்பாக – தொழிலாளர்களின் சார்பாக மழைக்கு நன்றி கூறுகின்றேன். சிலப்பதிகார வரிகளை மீண்டும் நினைவூட்டி – "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று சொல்லி நன்றி கூறுகின்றேன்.

இந்த நாள் மிக முக்கியமான நாள். எப்படிச் சொல்கிறேன் என்றால், தேவர் திருமகனாருடைய



குருபூஜை கமுதியில் நடைபெறுகின்ற நாள். தமிழ்நாட்டிலே உள்ள எல்லாத் தலைவர்களும் அங்கே தங்களுடைய கட்சித் தோழர்களோடு அணிவகுத் திருக்கின்றார்கள். நான் எந்த ஆண்டும் தவறாமல் அந்த விழாவிற்குச் செல்லக்கூடியவன். இடையிலே உடல் நலிவுற்றபோது, ஓரிரு ஆண்டு செல்லாமல் இருந்திருப் பேனேயல்லாமல், அந்த விழாவிற்குத் தமிழக மக்களும், தமிழகத் தலைவர்களும் சென்று எந்த நினைவுச் சின்னத்தை, எந்தக் கல்லறையை – எந்தத் தேவர் திருமகனுடைய சிலையை வணங்குகிறார்களோ, அந்தக் கல்லறையை தமிழகத்தினுடைய அரசுப் பொறுப்பிலே நான் இருந்த காலத்திலேதான் அமைத்துக் கொடுத்தேன்.

### பாட்டாளிகளுக்குப் பாராட்டு

இன்னும் சொல்லப்போனால், கமுதிக்குச் செல்கின்ற வழியில், மதுரையிலே இருக்கின்ற மிகப் பிரம்மாண்டமான தேவர் திருமகனுடைய சிலையை அமைத்து, அதை அன்றைய இந்திய ஜனாதிபதி கிரி அவர்களை அழைத்துத் திறந்து வைத்தவனும் நான்தான். இப்போதும் தமிழ்நாட்டிலே உள்ள தேவர் சிலைகள் அனைத்தையும் விட, பிரம்மாண்டமான – பெரிய சிலை மதுரையிலே இருக்கின்ற தேவர் சிலைதான் என்று மாற்றாரும் புகழ்கின்ற நிலை இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். அப்படிப்பட்ட மகத்தான புகழ் பெற்றவர் அவர்.

தொழிலாளர்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று – பணியாற்ற வேண்டுமென்று நாம் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, இன்றையதினம் சூளுரைத்துக் கொண்டு, இங்கே அமர்ந்திருக்கிறோம். இந்தச் சூளுரையை தம்முடைய வாழ்நாளில் தேசபக்தராக, விடுதலை வீரராக இருந்து கொண்டு – பொறுப்பேற்றுக் கொண்டு அந்தப் போரை நடத்தியவர் தேவர் திருமகன் ஆவார். அந்த நன்னாளில் அவர் யாருக்காகப் பணியாற்றினாரோ, யாருக்காகப் பாடுபட்டாரோ, அந்தத் தொழிலாளத் தோழர்களுடைய அமைப்புகள் – அமைப்பு சாராத நிலையில் இன்றைக்கு ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில் சென்னை மாநகரத்திலே குழுமி எனக்கு நன்றி தெரிவிக்கின்றீர்கள் என்றால், நான் அதற்காக பெருமகிழ்ச்சியடைகின்றேன். நன்றி தெரிவித்ததற்காக அல்ல; தமிழகத்தில் நன்றி உணர்வு இன்னமும் இருக்கிறதே என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில்; மற்றவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக அமைந்திருக்கின்ற இந்தப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டாமல், இந்த வர்க்கத்திற்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது.

ஏனென்றால், ''நன்றி மறப்பது நன்றன்று'' என்பது தமிழர்களுடைய மரபு. அந்த மரபில் நன்றியை மறப்பவர்கள் – இப்போது ஆங்காங்கு ஒருவர் இருவர் தோன்றுகின்ற இந்தக் காலகட்டத்தில்; அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், ''நாங்கள் இருக்கிறோம் உனக்கு நன்றி பாராட்ட; நாங்கள் பாராட்டுவது நன்றி அல்ல; நாங்கள் உனக்குக் கூறுவது வாழ்த்து; இது நன்றி என்று கருதிக் கொள்ளாதே; உனக்கு வாழ்த்துக் கூறுகிறோம்'' என்று சொல்லி வாழ்த்துக் கூறியிருக்கின்றீர்கள். யாருடைய வாழ்த்து பலிக்கிறதோ, பலிக்கவில்லையோ; பாட்டாளி

மக்களாகிய – தொழிலாளர் தோழர்களாகிய உங்களுடைய வாழ்த்து பலிக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த வாழ்த்துக்களையெல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

நம்முடைய வாரியத் தலைவர்கள் – பொன்குமார் ஆனாலும், மற்றும் குமரி அனந்தன் ஆனாலும், சேம நாராயணன் ஆனாலும், ரவிச்சந்திரன் ஆனாலும் – அத்தனைபேரும் அமைப்புக்களுக்குத் தலைவர்களாக – வழிகாட்டிகளாக இருக்கிறார்கள் என்பதைவிட; அமைப்பு சாராத தொழிலாளர்களுக்கு தலைவர்களாக இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதுதான் சிறப்பு. அமைப்பு என்று ஒன்று இருந்து – அந்த அமைப்புக்குத் தலைவராக இருப்பது என்பது சுலபம். ஒரு அமைப்பின் தலைவராக இருந்தால், அந்த அமைப்பு அவருக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். அமைப்பு சாராத தொழிலாளர்கள் என்றால், "நான் உன்னுடைய அமைப்பிலேயே இல்லை; நான் எந்த அமைப்பையும் சாராதவன்; அதற்குக் கட்டுப்படத் தேவையில்லை" என்று சொல்கின்ற விதண்டாவாதங்களுக்கும் அங்கே இடமுண்டு. ஆனால், அத்தனை பேரையும் கட்டியணைத்து, அத்தனை பேருக்கும் மகிழ்ச்சியும், நல்வாழ்வும் ஏற்படக் கூடிய அளவிற்கு – அவர்களைப் பயன் பெறுபவர்களாக, பயனாளிகளாக ஆக்குகின்ற ஒரு பெரும் காரியத்திற்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கின்ற பொன்குமார் போன்றவர்களை நான் இன்றல்ல – அவர் என் பக்கத்திலே வந்து அமர்வதற்கு முன்பே, அவரைப் பாராட்டியவன் நான்.

இந்த பொன்குமார் – இந்தத் தொழிலாளர்களுக்காக, பாட்டாளிகளுக்காக – அதிலும் குறிப்பாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்காக ஆற்றிய பணிகளை தொலைவிலே இருந்து பார்த்து – "இவர் அங்கிருக்கிறாரே ?" என்று ஏங்கியவன் நான். என்னுடைய ஏக்கத்தைப் போக்க அவர் என் பக்கத்திற்கே வந்து விட்டார்.

இப்படித்தான் அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய அமைப்புகளின் தலைவர்களாக இருப்பவர்கள் எல்லாம், என்னிடத்திலே மாறாத அன்பு கொண்டவர்கள்; நேசம் மிக்கவர்கள்; தோழமை கொண்டவர்கள்; பாசம் கொண்டவர்கள். அப்படிப் பட்டவர்களை இந்த அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய இயக்கத்திலே காணும்போது, அவர்களால் வளர்க்கப்பட்ட, அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட உங்களையெல்லாம் இந்தப் பெருமன்றத் திலே சந்திக்கும்போது, நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 2009 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக அரசு செயல்படுத்திவரும் 33 அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி, வருமான வரம்புமின்றி உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த 33 நல வாரியங்களிலும் இதுவரை பதிவு செய்துள்ள 2 கோடியே 9 இலட்சத்து 89 ஆயிரம் உறுப்பினர்களில்; 41 ஆயிரத்து 653 உறுப்பினர்களுக்கு 108 கோடியே 42 இலட்சத்து 22 ஆயிரத்து 372 ரூபாய்ச் செலவில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

**நலவாரியங்களின் உறுப்பினர்களுக்கு உதவிகள்**

அப்படிக் காப்பாற்றப்பட்ட ஒருவர் இங்கே வந்து என் கையைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறிய காட்சியைக் கண்டீர்கள். இதுபோன்று ஆயிரக் கணக்கில், இலட்சக்கணக்கில் தமிழகத்திலே இந்த வயதினர் மட்டுமல்ல; இன்னும் சிறு வயதினர் – பிறந்து மூன்று மாதம் கூட ஆகாத குழந்தைக்கு, இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து என்னிடத்திலே காட்டினார்கள். நான் அதைப் பார்த்தவுடன், இந்தத் திட்டத்தை அறிவித்து, அதன் காரணமாக நீங்கள் தருகின்ற நன்றி – வாழ்த்து, இவைகளைப் பெறுவதிலே அடைகின்ற மகிழ்ச்சியை விட; அந்தக் குழந்தையைக் காண்பதிலே நான் அடைந்த மகிழ்ச்சிதான் அதிகம் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2006, மே மாதத்திற்குப் பிறகு, இந்த 33 நல வாரியங்களின் மூலம் இதுவரை 19 இலட்சத்து 42 ஆயிரத்து 575 அமைப்பு சாராத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு; 909 கோடியே 40 இலட்சத்து 98 ஆயிரத்து 845 ரூபாய் – பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் நிதி உதவியாக வழங்கப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏன் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்கிறேன் என்றால், இவ்வளவு செலவழித்து இத்தனை பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே வந்து; இதற்குப் பிறகும் அரசியல் காரணத்திற்காக, இவைகள் நலம் தரக்கூடிய திட்டங்கள் அல்ல; பயனுள்ள திட்டங்கள் அல்ல; என்று இழித்தும் பழித்தும் பேசுகிறவர்களும் நாட்டிலே இருக்கிறார்களே என்பதை எண்ணும்போது; அப்படிப்பட்டவர்கள் நலம் பெற என்ன திட்டத்தை அறிவிப்பது என்று புரியாமல்தான் நான்

திகைக்கின்றேன். அவர்கள் உடல் நலம் கெட்டிருந்தால், நாம்அவர்களைக்காப்பாற்றலாம்; மனநலம் கெட்டவர் களை நாம் எப்படிக் காப்பாற்றமுடியும்?

எந்தத் திட்டமானாலும், ஒரு அரசாங்கம் நிறைவேற்றுகின்ற திட்டத்தால் மக்கள் எப்படிப் பயனடைகிறார்கள் – அப்படிப்பட்ட பயனை அடை வதற்கு ஆக்கபூர்வமான காரியங்களை அந்தந்த அமைப்புக்கள் – அமைப்புகளை நிருவகிப்பவர்கள் எவ்வாறெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அவர்களைப் பாராட்ட வேண்டிய கடமையை விட்டுவிட்டு; அந்தப் பொறுப்பை உணராமல், அந்தப் பொறுப்பிலே இருந்து தங்களை விலக்கிக் கொண்டு, ஏதோ அரசாங்கம் என்றால், ஒருவரை மாற்றி விட்டு இன்னொருவர் வந்து அமரவேண்டும் என்பதுதான் அரசாங்கம் என்று ஒரு நிலை எடுத்தால்; ஜனநாயகத்தில் நான் ஒத்துக் கொள்கிறேன்; நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

ஜனநாயகம்

அண்ணா வழியிலே வந்த நாங்கள், பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற ஜனநாயகவாதிகளின் அறிவுரைகளையெல்லாம் படித்த நாங்கள், அம்பேத்கர் போன்ற அறிஞர் பெருமக்களுடைய அந்த அற்புதமான கருத்து விளக்கங்களையெல்லாம் கேட்டறிந்த நாங்கள் – படித்தறிந்த நாங்கள் ஜனநாயகத்தைப் பற்றி உணராதவர்கள் அல்ல; ஒரு கட்சியே தொடர்ந்து ஆளவேண்டும்; ஒருவரே முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் நாம் அல்ல. பலர் முதலமைச்சராக வரலாம்; ஜனநாயகத்திலே அதற்கு வழியிருக்கிறது; அதற்கு முறையிருக்கிறது. ஜனநாயகம் என்றால் அதுதான். அதற்காக ஒரே நாளில் எல்லோருமே முதலமைச்சர் என்று சொல்லிவிட்டுப் போய் நாற்காலியிலே அமர்ந்தால், மக்கள் யார் யாரை அங்கே உட்கார வைக்க வேண்டுமோ, யார் யாரை எழுந்து வா வெளியே என்று சொல்ல வேண்டுமோ – அவர்களை அப்படிச் சொல்வதற்கு, அப்படிச் செய்வதற்கு மக்கள் தயாராக இருந்தால், அதுவும் ஜனநாயகம்தான். எனவே, ஜனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகாரம் கூடாது; ஜனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகார ஆட்சி நடத்தக் கூடாது.

**“இந்த 33 நல வாரியங்களிலும் இதுவரை பதிவு செய்துள்ள 2 கோடியே 9 இலட்சத்து 89 ஆயிரம் உறுப்பினர்களில்; 41 ஆயிரத்து 653 உறுப்பினர்களுக்கு 108 கோடியே 42 இலட்சத்து 22 ஆயிரத்து 372 ரூபாய்ச் செலவில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.”**

ஆறாவது முறையும் நீங்களே ஆட்சிக்கு வரவேண்டும் என்றெல்லாம் இங்கே சிலர் சொன்னார்கள். அது உங்கள் கையிலும் இல்லை; என் கையிலும் இல்லை. அது இந்த நாட்டு மக்களுடைய கையில் இருக்கிறது; ஏழையெளிய மக்களுடைய கையிலே இருக்கிறது; தொழிலாளத் தோழர்களுடைய கையிலே இருக்கிறது.

நண்பர்கள் சிலர் இங்கே பேசும்போது சொன்னார்கள் – இப்படித் தொழிலாளர்களுக்காக, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட வேண்டும்; அவர்களுக்குப் பயனளிக்க வேண்டுமென்ற எண்ணம் முதலமைச்சருக்கு இளமைப் பருவத்திலேயே வந்திருக் கும் போலும் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சீமான் வீட்டுப் பிள்ளை அல்ல; பணக்கார வீட்டுத் தாழ்வாரத்திலே தவழ்ந்தவன் அல்ல; சாதாரண மனிதன். என்னுடைய தந்தை, தாய் இவர்களெல்லாம் திருக்குவளை கிராமத்தில் – எங்களுடைய வீட்டைச் சுற்றியுள்ள நிலபுலங்களிலே நடவு நட்டு, உழுது, பயிரிட்டு, களை எடுத்து, நெல்லை உருவாக்கி, அறுவடை செய்து, அப்படிச் சாப்பிட்டவர்கள்தான், அப்படி வாழ்ந்தவர்கள் தான் என்னுடைய தாயும் தந்தையும்.

நான் ஒன்றும் பிறக்கும்போதே வாயிலே தங்கக் கரண்டியோடு பிறந்தவன் அல்ல; வைர மாலை, முத்து மாலையைக் கழுத்திலே அணிந்து கொண்டு பிறந்தவன் அல்ல; உங்களைப் போன்ற – உங்கள் வீட்டிலேயிருக்கின்ற ஏழைத் தாய்மார்களைப் போன்ற, ஏழைத் தந்தைமார்களைப் போன்ற; சாதாரணமான தந்தை, சாதாரணமான தாய்தான் எனது தாயும், தந்தையும். அவர்கள் என்னை எப்படி வளர்த்தார்கள்? நான் எப்படி வளர்ந்தேன்? என்னுடைய சின்னஞ்சிறிய கிராமத்தில் நான் வளர்வதற்கு என்னென்ன

சூழ்நிலைகள் எனக்கு இருந்தன என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் பேசும்போது அதைத்தான் எண்ணிப் பார்த்தேன்.

## பெரியாரின் கட்டுரைகள்

“எங்களைப் போன்ற தொழிலாளர்களிடத்திலே பழகிய காரணத்தால்தான், இந்தச் சூழ்நிலை இருந்த காரணத்தால்தான், இன்றைக்குக் கலைஞர் முதலமைச்சராகி எங்களையெல்லாம் பற்றி எண்ணுகிறார் – எங்களுக்காகச் சங்கங்கள் அமைக்கிறார் – எங்களுக்காக அமைப்புசாரா மன்றங்கள் அமைக்கிறார்'' என்று குறிப்பிட்டாரே, அப்போது நான் எண்ணிக் கொண்டேன். நான் பள்ளி மாணவனாக இருந்தபோது, எனக்கு ஆருயிர் நண்பராக இருந்தவர் – இன்றைக்கும் ஞாபகத்தோடு சொல்கிறேன் – திருவாரூர் தெற்கு வீதியில் இராமச்சந்திரன் என்கிற ஒரு சிகையலங்காரத் தொழிலாளிதான் – முடிதிருத்தும் தொழிலாளிதான். நான் அரசியல் தெரிந்துகொள்ள, பத்திரிகைகளைப் படிக்க நான் செல்லுகின்ற இடங்களிலே மிக முக்கியமான இடம் அவருடைய முடி திருத்தும் நிலையம்தான். அங்கே போய் வாசக சாலைகளிலே படிப்பதைப் போல, போய் அமர்ந்ததும், அங்குள்ள பத்திரிகைகளை எடுத்துப் படிப்பேன். அந்தப் பத்திரிகைகளிலே ‘‘பகுத்தறிவு'', ‘‘குடியரசு'' இந்த ஏடுகள் – தந்தை பெரியாருடைய கட்டுரைகள் – தோழர் கைவல்ய சாமியினுடைய கட்டுரைகளை ஏந்தி வருகின்ற கட்டுரைகள் – இவை களெல்லாம் அந்தப் பத்திரிகைகளிலே இருக்கும். அவற்றைப் படித்துப் படித்து, நானும் சுயமரியாதை உணர்வோடு பகுத்தறிவு உணர்வோடு – பெரியாருடைய கொள்கைகளை – ஜாதி மதமற்ற கொள்கைகளை ஏற்றுக் கொண்டு – அந்த சின்னஞ்சிறு வயதிலே நாங்கள் பகுத்தறிவுப் பள்ளிக்கூடமாக அன்றைக்கு நினைத்து ஏற்றுக் கொண்டு, அந்தத் தோழமையோடு இன்றளவும் அவர்களையும் மறவாமல் எண்ணி, என்னுடைய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்திலேகூட அவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், ‘‘முடிதிருத்துவோர்'' என்று எண்ணவில்லை – ‘‘முடி''யைத் திருத்துவோர் – நாட்டிலே ஆளுகின்றவர் தவறாக நடந்தால், அந்த முடியை அமைக்கின்றவனும், திருத்துகின்றவனும் – ‘‘முடி'' யைத் திருத்துபவனாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், நான் ‘‘முடிதிருத்துபவர்'' என்று சொன்னேன். அந்த இராமச்சந்திரன் அன்றைக்கு எனக்குக் கற்றுக் கொடுத்த, எனக்குப் பயிற்றுவித்த, எனக்குச் சொல்லிக் கொடுத்த, என்னை ஊக்கப் படுத்திய அந்த முறைகளெல்லாம் இன்றைக்கும் உதவுகின்றன. தொழிலாளர்களிடத்திலே, ஏழையெளிய வர்களிடத்திலே – முடிதிருத்துகின்ற இராமச்சந்திரனைப் போன்ற தோழர்களிடத்திலே இன்றைக்கும் நான் அந்த அளவிற்குப் பழகுகிறேன் என்றால், அது இளமையிலே நான் கற்ற அந்த வழி; பெரியார் தந்த வழி; அண்ணா காட்டிய வழி.

> **“2006, மே மாதத்திற்குப் பிறகு, இந்த 33 நல வாரியங்களின் மூலம் இதுவரை 19 இலட்சத்து 42 ஆயிரத்து 575 அமைப்பு சாராத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு; 909 கோடியே 40 இலட்சத்து 98 ஆயிரத்து 845 ரூபாய் – பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் நிதி உதவியாக வழங்கப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.”**

## ஜாதி – மத நம்பிக்கை இல்லாதவன்

இன்றளவும் சாதி, மத, பேதங்களை ஒழிக்க வேண்டும் என்று சொல்கின்ற இந்த இயக்கத்திலே – நான் மார்தட்டிச் சொல்லிக் கொள்வேன். செயல் முறையிலே அதனைக் காட்டக்கூடியவர்களிலே ஒரு தலைவனாக நான் இருக்கின்றேன். அதைச் செயல்முறையிலே காட்டக் கூடியவன். நான் கலப்புத் திருமணத்தை, கூட்டத்திலே மாத்திரம் பேசுபவன் அல்ல; என்னுடைய வீட்டிலேயே அதைச் செய்து காட்டியவன். என்னுடைய மகன் அழகிரிக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணைத்தான் மணம் முடித் தேன். என்னுடைய மருமகளாக இருக்கின்ற காந்திமதி தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த பெண். “சரி, பெண்ணை எடுத்தாய் – அந்தச் சமுதாயத்திற்குப் பெண்ணைக் கொடுத்தாயா?'' என்று கேட்டால்; என்னுடைய பேத்தி கலைச் செல்வியை, நாமக்கல்லிலே இருக்கின்ற ஒரு டாக்டருக்கு – அருந்ததியர் வகுப்பிலே பிறந்த ஒருவருக்கு – அந்தப் பெண்ணைக் கொடுத்திருக்கிறேன். எனவே, ஜாதி, மத வித்தியாசத்தை என்றைக்கும் பார்த்தவன் அல்ல நான்.

இன்றைக்கும் என்னுடைய அந்தரங்க உதவியாளராக – என்னுடைய அன்புக்குரிய உதவியாளராக – இடைவிடாமல் எனக்குப் பணியாற்றுகின்ற



புதுடில்லி, பிரகதி மைதானம், லால் சௌக் கலையரங்கில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி புதுதில்லி திரு. கம்பம் பெ. செல்வேந்திரன் அவர்களின் முன்னிலையில் "தமிழ்நாடு நாள் விழாவை" 21.11.2010 அன்று குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

உதவியாளராக – என்னைக் காப்பாற்றியே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்ற உதவியாளராக இருக்கின்ற தம்பி அருந்ததிய வகுப்பைச் சேர்ந்தவர்தான். எனக்கு ஜாதி, மதம் இவைகளிலே நம்பிக்கை உள்ளவர்களைப் பிடிக்காதது மாத்திரமல்ல; நானும் ஜாதி, மத நம்பிக்கையில்லாதவனாகத்தான் என்னுடைய பொது வாழ்வை நடத்திக் கொண்டிருக்கின்றேன்.

அதனால்தான் – இங்கே நண்பர்களெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல், "இவன் எப்படி இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் பாதுகாவலனாக இருக்கின்றான்? என்ன காரணம்?" என்று யாரும் ஆராய்ச்சி செய்ய வேண்டாம். நானே சாதாரண, சாமானிய, பின் தங்கிய, மிக மிகப் பின்தங்கிய – பின்தங்கிய, பின்தங்கிய என்று எத்தனை பின்தங்கிய என்று போட்டுக் கொண்டாலும், அவ்வளவு பின்தங்கிய சமுதாயத்திலே பிறந்தவன் என்ற காரணத்தாலேதான்; இன்றைக்கு அந்த மக்களுக்காக உழைக்கின்ற அந்த உள்ளத்தை நான் பெற்றிருக்கின்றேன். அந்த உள்ளம் தான் நம்முடைய உள்ளங்களையெல்லாம் ஒன்று சேர்க்கின்ற உள்ளமாக இன்றைக்கும் இருக்கிறது; அந்த உள்ளம்தான் உங்களை வாழ்த்துகிறது; அந்த உள்ளம்தான் நீங்கள் சொல்கிற வாழ்த்துக்களைப் பெறுகிறது. ஏதோ பாராட்டினார்கள் – முதலமைச்சர் என்பதற்காக வாழ்த்தினார்கள் என்று அலட்சியப் படுத்தாமல், உங்களுடைய வாழ்த்துக் களையெல்லாம் பொன்னேபோல் போற்றி; நீங்கள் காலால் இட்ட கட்டளையை, தலையால் செய்கின்ற ஒரு தொண்டனாக என்றென்றும் இருப்பேன்!

ஆணவத்தால், அகம்பாவத்தால் – முதலமைச்சர் என்கின்ற அந்த கர்வத்தால், உங்களை நான் பார்க்கமாட்டேன்; உங்களுடைய தோழன் – உங்களுடைய தொண்டன் – உங்களு டைய உறவினன் – உங்களுடைய உடன்பிறப்பு என்கின்ற முறையிலேதான் என்றென்றும் உங்களோடு இருப்பேன் என்று கூறி; இந்த அருமையான மாநாட்டை ஏற்பாடு செய்த – முக்கியமாக நின்று ஏற்பாடு செய்த – என்னுடைய தம்பி பொன்குமார் அவர்களுக்கும், மற்றும் உள்ள அமைப்புசாரா வாரியங்களின் நண்பர்களுக்கும், என்னுடைய இதயபூர்வ மான நன்றியைத் தெரிவித்து, "என்றென்றும் நான் உங்களோடு நிற்பேன்; நீங்களும் என்னோடு இருக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகின்றேன்.

★

# கல்விச் செல்வத்தை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!

**27.11.2010 அன்று வேலூர், சேர்க்காட்டில் நடைபெற்ற திருவள்ளுவர் பல்கலைக்கழக புதிய கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

பெருந்திரளாக குழுமியிருக்கின்ற மாபெரும் கூட்டம் உற்சாக முழக்கத்தை வெளியிட முடியாமல் தங்கள் விழிகளின் மூலமாகவும் தங்களுடைய பரபரப்பான பார்வையின் மூலமாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை நான் உணராமல் இல்லை. இன்று காலையிலே வந்து சேர்ந்து இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டிய நான், 8.00 மணிக்கே சென்னையிலே புறப்பட்டும் கூட 8.00 மணியிலே இருந்து இங்கு வந்து சேருகிற வரையில் வழியெல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்களை, தோழர்களை, ஆடவர், பெண்டிர் என ஆயிரம் ஆயிரமாயிரவரை சந்திக்கவும் அவர்களுடைய வரவேற்பை பெறவுமான ஒரு சூழல் வழக்கம் போல் அமைந்த காரணத்தால் அதையெல்லாம் கடந்து இங்கே வருவதற்கு நேரமாகிவிட்டது. அதுவரையிலே நீங்கள் காத்திருந்தீர்கள் என்பது, நான் தாமதமாக வந்து எனக்கு ஏற்படுத்திய கவலையை விரட்டுகின்ற மகிழ்ச்சிப் பெருக்காக மாறிவிட்டது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைக்க நடைபெறும் இந்தப் பெருவிழாவில் வழக்கம்போல் அமைச்சர்களுடைய முன்னிலையில் வைக்கப் படக்கூடிய கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. முதலில் கோரிக்கைகளைக் கவனித்து, உங்களுக்கு சொல்ல வேண்டிய அல்லது செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி நான் விவரிக்கலாம் என்று கருதுகின்றேன்.

**பல்கலைக்கழக வளாகத்திலே விடுதிகள் அமைக்கப்படும்**

முதல் கோரிக்கையே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் எழுப்பியது. தமிழக சட்டமன்றத்தில் ஒவ்வொரு நாளும் முதல் கோரிக்கையை வைப்பவர் அவர்தான். அவர் இன்றைக்கு வைத்த இரண்டு கோரிக்கைகள். ஒன்று இங்கே மாணவர் விடுதியைக் கட்ட வேண்டும் என்பதாகும். இவ்வளவு பெரிய கட்டடத்தை கட்டி முடித்துவிட்டீர்கள்;





இருந்தாலும் எங்களுக்கு இங்கே வசதியாக, வாய்ப்பாக விடுதி ஒன்றைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

20 கோடி ரூபாய் செலவழித்து பல்கலைக்கழகத்திற்கு கட்டடம் கட்டிய எங்களுக்கு அதைவிட மிக மிகக் குறைவான செலவில் விடுதி கட்டத்தானா முடியாது. ஆகவே அதை ஒரு கோரிக்கையாக வைத்து, 'பார், பார்' – என்னதான் காட்பாடி எம்.எல்.ஏ. இங்கே இருந்தாலும், இராணிப்பேட்டை எம்.எல்.ஏ. இருந்தாலும் அவர்களையெல்லாம் முந்திக்கொண்டு; வேலூர் எம்.எல்.ஏ.வாகிய நான் கேட்டு அந்தக் கோரிக்கை பலித்து விட்டது என்று, அவர் உங்களிடத்திலே மார்தட்டிக் கொள்ள நான் இடையூறாக இருக்க மாட்டேன். எனவே அந்தக் கோரிக்கை நிச்சயமாக வெகுவிரைவிலே நிறைவேற்றப் பட்டு, இந்தப் பல்கலைக்கழக வளாகத்திலே அந்த



விடுதிகளும் அமைக்கப்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் சொல்லப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய 84 பேர் தற்காலிக ஊழியர்களாக இருப்பவர்கள்; அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வந்திருக்கிறது. பல்கலைக்கழகமானாலும் வேறு அமைப்புக்களானாலும், மன்றங்களானாலும் எந்த நிருவாக இடமாக இருந்தாலும் அங்கெல்லாம் பணியாற்றுகின்றவர்களை, அங்கு தற்காலிக பணியாளர்களாக இருப்பவர்களை நிரந்தர பணியாளர்களாக ஆக்குவதற்கு ஒரு முறையை வைத்திருக்கிறது இந்த அரசு. ஒரு தேர்வு எழுதச் சொல்லி அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுகின்றவர்களுக்கு உடனடியாக அவர்களுக்கான பணியை – நிரந்தரப் பணியை வழங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போல இந்த 84 பேருக்கும் வெகுவிரைவிலே தேர்வு வைத்து, அதிலே தேர்ச்சி பெற்று, அவர்கள் இங்கே நிரந்தர ஊழியர்களாக, பணியாளர்களாக அமையலாம் என்ற உறுதியையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

**அண்ணா சாலை**

மற்றொன்று, வேலூர் மாவட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இருந்து வழக்கத்திலே இருந்து வந்த 'ஆபிசர்ஸ் லேனை' "அண்ணா சாலை" என்றும், 'லாங்கு பஜாரை'' – "திருமுருக கிருபானந்த வாரியார் சாலை" என்றும் பெயர் மாற்றம் செய்ய வேலூர் மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அந்த முன்மொழிவுகள் மீது அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை ஏற்கெனவே நிறைவேற்றி இருக்கின்றார்கள். நான் நினைத்து விட்டால் – உறுதி அளித்து விட்டால் அதை நிறைவேற்றுவதற்கு நான் மீண்டும் அரசு அலுவலகத்திற்கு சென்று மேஜைக்கு முன்னால் அமர்ந்து செயலாளர்களை அழைத்து, "கொண்டு

வாருங்கள் – கோப்புகளை" என்று சொல்லி, பிறகு கையெழுத்திட்டு அனுப்புகின்ற பழக்கம் எனக்கு இல்லை. கோரிக்கை வைத்த இடத்திலேயே அதை நிறைவேற்ற முடியுமா ? நிறைவேற்ற முடிகிற காரியமாக இருந்தால் அதற்கு தகுதி இருந்தால் அங்கேயே நிறைவேற்றுவதுதான் எனக்குப் பழக்கம். எனவே, "அண்ணா சாலை" – "திருமுருக கிருபானந்த வாரியார் சாலை" என்று பெயர் மாற்றம் செய்ய வேலூர் மாநகராட்சி நிறைவேற்றிய தீர்மானத்தை அரசின் சார்பில் வரவேற்று ஆணையை இந்த இடத்திலேயே பிறப்பிக்கிறேன்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கட்டப்பட்டு வரும் மக்கள் குறை தீர்க்கும் அரங்கிற்கு கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் பெயர் சூட்டப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும், இதே இடத்தில், இதே நேரத்தில் நிறைவேற்ற இந்த அரசின் சார்பில் என்னுடைய ஒப்புதலையும் வழங்குகின்றேன்.

இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்றீர்கள் – எதிரே பார்க்கிறேன். இன்று மாலையிலோ, நாளை காலையிலோ தொலைக்காட்சியில் நேரடியாக இந்த நிகழ்ச்சியை ஒளிப்படம் எடுத்துக் காட்டுகின்றவர்கள், தமிழ்நாட்டு மக்கள் அதிசயத்தக்க அளவிற்கு இவ்வளவு பெரிய கூட்டமா என்ற நிலையிலேதான் இந்தப் படத்தை எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

**கல்விக்கு தமிழகத்தில் உயர்வும் வரவேற்பும்**

இங்கு மாத்திரமல்ல; எனக்கு நேராக உட்கார்ந்திருக்கின்ற நீங்கள் மாத்திரமல்ல; இரு புறங்களிலும், இடப்புறம், வலப்புறம் ஆகிய இருபுறங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள், மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள், பல்வேறு கல்லூரிகளிலேயிருந்து வந்தவர்கள் நிரம்பியிருக்கின்ற இந்தக் காட்சியைக் காணுகின்றபோது, கல்விக்குத் தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு உயர்வும், வரவேற்பும் கிடைத்திருக்கிறது என்பதை நான் எண்ணியெண்ணி மகிழ்கிறேன். ஒரு காலத்திலே – இங்கே குறிப்பிட்டார்களே, அதைப் போல, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் – வெளியூர்களுக்கு காரிலே சென்று திரும்புகின்ற நேரத்தில், ஒரு இரயில்வே கேட்டிற்குப் பக்கத்திலே நின்று கொண்டிருந்த ஒரு ஏழைச் சிறுவனைப் பார்த்து – "ஏனப்பா, என்ன செய்து கொண்டிருக்கிறாய் – மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறாயே, ஏன் நீ மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறாய் ? படிக்க வில்லையா ?" என்று கேட்டார். அவன் சொன்னான் – "படிக்கலாம், சாப்பிட்டால்தானே படிக்க முடியும் – சாப்பாட்டுக்கு வழியில்லையே ?" என்றான். சாப்பிடாத காரணத்தால் தான் அவன் படிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட பெருந்தலைவர் காமராஜர், பக்கத்திலே இருந்த அதிகாரியை அழைத்து – "இப்படிச் சொல்கிறானே, ஏன் அப்பசியைப் போக்க நாம் திட்டம் தீட்டக் கூடாது ?" என்று கேட்டார். அந்த அதிகாரியினுடைய பெயர் சுந்தரவடிவேலு. சுந்தரவடிவேலு என்றால், குத்தூசி குருசாமியினுடைய துணைவியார் குஞ்சிதம் அவர்களின் தங்கை காந்தம் அவர்களை மணந்தவர். அவர் நீதிக் கட்சியிலே தொடர்புடையவர். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன், அவர் சொன்னார் – "நிச்சயமாகத் திட்டம் வகுக்கலாம்" என்று திட்டத்தைத் தீட்டி காமராஜரிடத்திலே கொடுத்தார். அதுதான் ஏழைப் பிள்ளைகளுக்கு வழங்கும் மதிய உணவுத் திட்டம்.

மதிய உணவினைக் குழந்தைகளுக்குத் தந்தால், அதைச் சாப்பிடுகின்ற குழந்தைகள் கல்வியிலே நாட்டம் கொண்டு, அதற்கு ஆர்வத்தோடு செல்வார்கள். பசி நீங்கி, படிப்பிலே அவர்களது கவனம் செலுத்தப்படும் என்று மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது பெருமளவிற்கு வெற்றிகரமாக அமைந்தது என்றாலும் கூட, அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த என்னுடைய அருமை நண்பர் – முதலமைச்சராக இருந்த எம்.ஜி. ஆர். அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை "சத்துணவுத் திட்டம்" என்ற பெயர் மாற்றி வழங்கினார்.

**அறிவு வளர கல்வி பெறவேண்டும்**

அண்ணாவினுடைய மறைவிற்குப் பிறகு, கழக ஆட்சியில், அண்ணாவினுடைய கொள்கைகளை எல்லாம், ஏழையெளியவர்கள் வாழ, அவர்கள் ஏற்றம் பெற என்னென்ன கொள்கைகள் உண்டோ, அந்தக் கொள்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டு மென்று சங்கல்பம் செய்து கொண்டு, அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி – சத்துணவுத் திட்டத்தை மேலும், அதிக சத்துள்ளதாக ஆக்க வேண்டும் என்று, சத்துணவோடு ஒரு முட்டை வழங்கப்படும் என்று அறிவித்து, ஏழையெளிய பிள்ளைகள் – ஒரு முட்டைகூட சாப்பிடாத பிள்ளைகள் – தங்கள் பசி ஆறுவது மாத்திரமல்ல – சத்துணவும் கிடைக்கிறது என்ற எண்ணத்தோடு, அந்த உணவைப் பெற்று தங்களுடைய அறிவுக்குத் தேவையான உணவையும் பள்ளிக் கூடங்கள் மூலமாகப் பெற்றார்கள்.

அதற்குப்பிறகு இதே ஆட்சியிலே ஒரு முட்டை என்பது இரண்டு முட்டையாகி, இரண்டு முட்டைகள் என்பது மூன்று முட்டைகள் ஆகி, மூன்று முட்டைகள் நான்கு முட்டைகளாகி, இப்போது வாரத்திற்கு ஒவ்வொரு நாளும் ஒரு முட்டை குழந்தைகளுக்குப் போடுவது என்று சத்துணவோடு தினந்தினம் குழந்தைகள் சாப்பிடுகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்றால் என்ன காரணம்; கிராமப்புறத்திலே இருக்கிற ஏழையெளிய மக்கள் மாத்திரமல்ல – பட்டினக்கரையிலே வாழ்கிற ஏழையெளிய மக்களும் பசியாற உணவு உண்டு, அறிவு வளரக் கல்வி பெற வேண்டும் என்று அந்த எண்ணத்தோடு தான் அதைச் செய்தோம் – செய்து கொண்டிருக்கின்றோம் – தொடர்ந்து செய்வோம் – தொடருவோம் – நாங்களே தொடர்ந்து செய்வோம். புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

இங்கே நம்முடைய தம்பி பொன்முடி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, கல்வித் துறையிலே ஏற்பட்டுள்ள வளர்ச்சி எந்த அளவிற்கு வந்து நிற்கிறது என்றால், தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துச் சொன்னாரே, செம்மொழி மாநாட்டில் நாம் நிறைவேற்றிய தீர்மானம் தமிழில் படிப்பவர்களுக்குத் தான் வேலைவாய்ப்பில் முதல் சலுகை – என்ற அந்த அருமையான கருத்தைத் தீர்மானமாக ஆக்கியிருக்கிறோமோ, அந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துகின்ற மசோதா, கடந்த சட்டமன்றத் தொடரிலே கொண்டு வரப்பட்டு, அது இப்போது நடைமுறைக்கு வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

20 சதவிகிதம் – 100 பேர் மாணவர்கள் வந்தால், அந்த 100 பேர் படித்து விட்டு வந்தால், அந்த 100 பேரில் 20 பேர், தமிழில் படித்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பில் உத்தரவாதம் உண்டு என்ற அந்த நிலையை உருவாக்கியிருக்கிறோம். இப்படித் தமிழுக்கொரு முக்கியத்துவம் கொடுக்கின்ற அளவிற்கு நம்முடைய படிப்பு, பட்டப்படிப்பு இவையெல்லாம் பயன்படுமேயானால், அதற்கு என்ன காரணம்? எந்தவொரு அரசாக இருந்தாலும், அது ஏழையெளிய மக்களுடைய படிப்பிலே கவனம் செலுத்த வேண்டும் – கல்வியிலே அக்கறை காட்ட வேண்டும் – கல்வியிலே அக்கறை காட்டப்பட்டால்தான், ஒரு குடும்பத்திலே ஒரு பெண் படித்தால், அந்தக் குடும்பமே கல்வியறிவு பெற்றதாகப் பொருள் என்பார்கள். ஒரு கிராமத்திலே ஒரு பையன் படித்தால், அந்தக் கிராமமே படிப்பறிவு பெற்றதாகப் பொருள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கிராமமோ, நகரமோ, தெருவோ, ஊரோ எந்தப் பகுதியாக இருந்தாலும், அங்கேயிருக்கின்ற இளம் பிள்ளைகள் படிப்பறிவு பெற்று, கல்வியறிவு பெற்று அதன் மூலமாக வளருகின்ற விஞ்ஞான அறிவைப் பெற்று, அந்த விஞ்ஞான அறிவைப் பெறுகின்ற காரணத்தால், அவர்கள் பல்வேறு உயர்வுகளைப் பெற்று, தொழில் அறிவையும், அவர்கள் மேலும், மேலும் வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்கின்ற அந்த அறிவையையும் பெறுகின்ற ஒரு நிலைமையில்தான் – கல்வி அறிவு எவ்வளவு சிறந்தது – அது எப்படியாவது – ஏழ்மையைப் போக்கியாவது – அவர்களைக் கல்விச் செல்வம் பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்று கண்ட கனவு இன்றைக்கு நிறைவேறி இருக்கின்றது.

**கிராமங்களை இணைக்கிற அளவிற்கு பல்கலைக்கழகங்களை உருவாக்கியிருக்கிறோம்!**

காமராஜர் காலத்திலே தொடங்கி, அண்ணா காலத்திலே வளர்ந்து, அந்தக் காலத்திலே பள்ளிக் கூடங்களாக இருந்தவை இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளாக ஆகி, பல்கலைக்கழகங்கள் – கிராமங்களை எல்லாம் இணைக்கின்ற அளவிற்குப் பல்கலைக்கழகங்கள் உருவாகியிருக்கிறது என்றால், இந்த உயர்வை எண்ணிப் பார்க்கவே நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. எண்ணிப் பார்க்கும்போது, நம்முடைய நாட்டிலே, நம்முடைய ஆட்சியிலா இது நடைபெறுகிறது என்று ஆச்சர்யப்பட வைக்கின்ற காரியமாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அளவிற்கு ஒரு சர்க்கார், ஒரு அரசு – பெரும் பணத்தைச் செலவிட்டு, இங்கே இந்தப் பல்கலைக்கழகத்திற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கி – கட்டடம் – கட்டடத்தோடு முடிவதில்லை – இதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் – இதிலே பொறுப்பேற்றுக் கொண்டு, பங்கேற்று – இதிலே தங்களுடைய உழைப்பை நல்குகின்றவர்களுக்கு ஊதியம் – அவர்களுடைய வசதிகளுக்கும், வாய்ப்புகளுக்குமான செலவு – எத்தனையோ கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும், கல்விக்காக தமிழ் மாநிலத்திலே மாத்திரம், செலவழிக்கப்படுகிறது என்றால், அதை மாணவர்கள் ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தினுடைய கட்டடங்கள் தொடக்க விழா நிகழ்ச்சி என்ற காரணத்தினால், நான் ஒன்றை வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு கஷ்டத்திற்கிடையே நம்முடைய ஆன்றோர்களும், சான்றோர்களும், பெரியவர்களும், பெற்றோர்களும் வழங்குகின்ற இந்தக் கல்விச் செல்வத்தை மாணவர்கள் பாழாக்கி விடக்கூடாது –

அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிப் பயன் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், திருவள்ளுவர் அன்றைக்கே சொல்லியிருக்கின்றார் – கல்வியைப் பற்றிச் சொல்லும் போது, அந்தக் கல்வி எப்படி இருக்க வேண்டும் – அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லும் போது, "கற்க" என்று சொன்னார். அப்படி சொல்லும்போது,


*"கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்றார்.

கற்க வேண்டியவற்றைக் கற்க என்றார் – "கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றார். மயிலாடுதுறையில் ஒரு பள்ளி நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் திருக்குறளைப் பற்றிப் பேசும்போது சொன்னார்கள்.

*"கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக ''*

என்று சொன்னார்கள். "படிக்க வேண்டியவற்றைப் படியுங்கள் – படித்த பின் அதற்குத் தக நில்லுங்கள்" என்பதுதான் அந்தக் குறளுக்குப் பொருள். படித்தால் மாத்திரம் போதாது. படித்தபடி நடக்க வேண்டும். படித்து முடித்துவிட்டு, நாளைக்கு வேலைநிறுத்தம், ஸ்டிரைக் என்று போனால், படித்ததனால் பயனில்லை. படிப்பது அறிவை வளர்த்துக் கொள்வதற்காகத்தான் – படித்தது அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக அல்ல. படிப்பது நம்முடைய மொழியை வளர்க்க – நம்முடைய தமிழை வளர்க்க – நம்முடைய நிலையை உயர்த்த – நம்முடைய சமுதாயத்தை உயர்த்தப் பயன்படுமேயானால், அதற்காக எந்தப் போராட்டத்தை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அதை விடுத்து விட்டு, கற்போம் – படித்த பிறகு நிற்போம் – எதற்காக நிற்போம் ? என்ற அந்தக் கேள்விக்கு நாம் பதில் தரவேண்டும். நல்லவைகளுக்காக உறுதியாக நிற்போம் – நல்லவைகளைச் சாதிப்பதற்காக உறுதியாக நிற்போம் – "கற்க" – "கசடற கற்போம்" – பிழையில்லாமல் கற்போம் என்றால், எழுத்துப் பிழையை, இலக்கணப் பிழையை அல்ல வள்ளுவர் சொல்வது. "கசடறக் கற்போம்" என்றால், தெரிந்துகொள்ள வேண்டிய ஞானத்தை, அறிவை, ஒரு சிறிதும் மாசு இல்லாமல், நாம் தெரிந்து




கொள்ள வேண்டும். அப்படித் தெரிந்து கொண்ட பிறகு, "அதற்குத் தக நிற்போம்" என்று வள்ளுவர் சொன்னார்.

அப்படிப்பட்ட இந்த ஒரேயொரு வரியை மாத்திரம் "கற்க கசடற கற்பவை கற்றபின்" – படிக்க வேண்டியவற்றைப் படித்த பிறகு, "நிற்க அதற்குத் தக" என்று சொன்ன வள்ளுவருடைய வாக்கை மாணவச் செல்வங்கள் அனைவரும் – மனதிலே அழுத்தந்திருத்தமாகப் பதிய வைத்துக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று இந்த அருமையான கட்டடத் தொடக்க விழாவிலே அனைவருக்கும் வேண்டுகோளாக வைத்து, இந்த அளவில் விடைபெற்றுக்கொள்கிறேன். ★

# சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது!

சட்டப்பேரவையில், மாண்புமிகு நிதியமைச்சர் **பேராசிரியர் க.அன்பழகன்** அவர்கள் 9 - 11 - 2010 அன்று துணை மதிப்பீட்டை தாக்கல் செய்து ஆற்றிய உரை.



2010 – 2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 3,607 கோடியே 27 இலட்சம் நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 2,168 கோடியே 58 இலட்சம் வருவாய்க்கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1,438 கோடியே 69 இலட்சம் மூலதன மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2010 – 2011 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில் 2010 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப்பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும்தான் இந்த துணை மானியக்கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டன.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று சுமார் நான்கரைஆண்டுகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், இந்த அரசு ஏழை எளிய பாமர மக்களின் மேம்பாட்டிற்காக ஆற்றியுள்ள அரும்பணிகளை யாரும் மறுக்க முடியாது. இதுவரை 4 இலட்சத்து 79 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு ரூபாய் 15 கோடியே 32 இலட்சம் செலவில், ஏழைகளுக்காகவே தொண்டாற்றி வாழ்ந்த அணையா விளக்கு அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாவினை இந்த அரசு கொண்டாட முடிவெடுத்துள்ள இந்த வேளையில் அவரது பெயரால் ஒரு மாபெரும் வணிக வளாகத்தை சென்னை மாநகரில் இந்த ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இப்பணிக்கென தேவைப்படும் கூடுதல் நிதியை மாநில நிதியாக ரூபாய் 7 கோடியே 3 இலட்சம் தற்போது மானியக் கோரிக்கை எண். 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் உணர்வை இளைய தலைமுறைக்கு ஊட்டவும், கணினியுகத்தில் தமிழ் மொழி அடைய வேண்டிய பரிணாம வளர்ச்சியைப் பற்றி அலசி ஆராயவும், செம்மொழியாம் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்பம்சங்களை உலகளாவிய நிலைக்குக் கொண்டு செல்லவும், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கோவை மாநகரில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு முதல் முறையாக 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை மகத்தான நிகழ்வாக நடந்தேறியது. இந்த மாநாடு தமிழைத் தரணியெங்கும் எதிரொலிக்கச் செய்கிற முக்கிய நிகழ்வாக விளங்கியதுடன், அடுத்த கட்டமாக தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்த பரிசீலனை செய்யும் களமாகவும் விளங்கியது.

| தெ<br>ரி<br>யு<br>மா ? | **நடப்பாண்டில் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பயிர்க் கடனில் அக்டோபர் வரை ரூ.1,674 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.** |
|---|---|

இம்மாநாட்டின் முடிவில் தமிழில் பயின்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்கிற வரலாற்று சிறப்புமிக்க முடிவு எடுக்கப்பட்டு, அது உடனடியாக செயல்படுத்தப்பட்டு தமிழ் ஆர்வலர்களுக்கு நிறைவைப்பெற்றுத் தந்தது. இம்மாநாட்டிற்காக தற்போது தேவைப்படும். கூடுதல் நிதி ரூபாய் 15 கோடியே 50 இலட்சம் பல்வேறு மானியக்கோரிக்கைகளில் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் மதுரையில் அமைய இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவைக்கு காப்புத் தொகையாக ரூபாய் 100 கோடியும், நடப்பு ஆண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ள சிறப்பு மானியமாக ரூபாய் 14 இலட்சத்து 46 ஆயிரத்தையும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, 'மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)' என்பதன் கீழ், துணை மதிப்பீடுகளில் ரூபாய் 100 கோடியே 14 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

### தஞ்சைப் பெரிய கோயிலில் உன்னத விழா

தஞ்சைப் பெரிய கோயில் தமிழர்களின் கலை உணர்வுக்கும் பண்பாட்டுக்கும் தலைசிறந்த அடையாளமாகத் திகழ்கிறது. மாமன்னன் இராசராசன் அதைக் கட்டி ஆயிரம் ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டிதஞ்சை மாநகரில் செப்டம்பர் 22 முதல் 26ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் கோலாகலமான விழா நடத்தப்பட்டது. பெரிய கோயிலின் சிறப்புக் கூறுகளையும், அதன் கலை வடிவங்களையும், மாமன்னன் இராசராசனின் நிருவாகப் பெருமையையும் உலகமெங்கும் ஒலிக்கச் செய்த உன்னத விழாவாக இது விளங்கியது. இவ்விழா ஏற்பாடுகளுக்கு ரூபாய் 8 கோடியே 25 இலட்சமும், தஞ்சை மாநகரின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூபாய் 38 கோடியே 88 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது.

இதற்காக தற்போது தேவைப்படும் கூடுதல் நிதி ரூபாய் 35 கோடியே 47 இலட்சத்து 93 ஆயிரம் உரிய மானியக்கோரிக்கைகளில் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை வழங்கும் பொருட்டு, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், பிற அத்தியாவசியப் பொருட்களான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு என மளிகைப் பொருட்கள் 10 அடங்கிய பொட்டலம் மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் மானிய விலையில் வழங்குவதால் அரசின் உணவு மானியச் செலவு ரூபாய் 3,750 கோடியாக மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்த ரூபாய் 200 கோடி கூடுதலாக அரசு மானியம் தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை) என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் கொள்முதல் செய்ய அரசு குறுகிய காலக் கடனாக ரூபாய் 500 கோடி அனுமதிக்க உத்தேசித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) என்பதன் கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

### சாலைகளை சீரமைக்க கூடுதலாக ரூ.309 கோடி

மாநிலம் முழுவதும் நகராட்சி மற்றும் மாநகராட்சி சாலைகள் சீரமைப்பதற்காக சிறப்பு சாலைத் திட்டத்திற்கு ரூபாய் 1,000 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, ஏற்கெனவே வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியைவிடக் கூடுதலாக தேவைப்படும் ரூபாய் 309 கோடியை மாநில அடிப்படை வசதி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்தும், ரூபாய் 194 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய பகிர்வு நிதி நிலுவையிலிருந்தும் தமிழ்நாடு நகர்ப்புர சாலை அடிப்படை கட்டமைப்பு நிதியத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீடுகளில் முறையே 'மானியக்கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை' என்பதன்கீழ் ரூபாய் 309

கோடியும், மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை என்பதன்கீழ் ரூபாய் 194 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 'ஒரு கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு கோடியே 44 இலட்சத்து 35 ஆயிரத்து 756 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது கட்டமாக ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வரும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் கூடுதலாகத் தேவைப்படும் 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதற்காக, ரூபாய் 261 கோடி கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. 'மானியக் கோரிக்கை எண் 31 – தகவல் தொழில் நுட்பவியல் துறை'' என்பதன் கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தனியார் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் திட்டம் கடந்த சுதந்திர தினத்தன்று, முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதில் இந்த அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டங்களின் பராமரிப்பு உட்பட பல்வேறு செலவினங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு மானியமாக ரூபாய் 84 கோடியும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 270 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் முறையே ரூபாய் 84 கோடி மற்றும் ரூ.1,000 சேர்க்கப்பட்டுள்ளது.

**கலைஞர் வீடு வழங்கும் திட்டம்**

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக உள்ள மாநிலம் தமிழ்நாடு. இத்திட்டத்தில் கூடுதலாகியுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் பல்வேறு வகையான ஓய்வூதியங்களுக்கு கூடுதல் நிதியொதுக்கமாக ரூபாய் 142 கோடியே 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

குடிசைகள் இல்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கத் தீட்டப்பட்ட "கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்" கீழ் கட்டப்பட்டு வரும் கான்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகளுக்கான அலகுத்தொகையை ரூ.60,000 லிருந்து ரூ.75,000ஆக உயர்த்த இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 450 கோடியை அரசு அனுமதித்துள்ளது. அதேபோல் மத்திய அரசின் திட்டமான இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கும் மத்திய அரசு வழங்கும் நிதியான ரூ.33,750 உடன் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த மானியத்தொகையான ரூ.26,250/– என்பதை மேலும் ரூ.15,000/– உயர்த்தி மொத்தம் ரூ.41,250/–ஐ மாநில நிதியாக வழங்கி கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு வழங்குவது போலவே ரூ.75,000/– என்ற அலகுத் தொகையை அனுமதித்து ஆணையிட்டுள்ளதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 155 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை' என்பதன்கீழ், துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்தான உணவைக்குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில், உணவூட்டுச் செலவினத்தையும் உணவின் அளவையும் உயர்த்தி வழங்க கூடுதல் செலவினமாக ரூபாய் 74 கோடியும், வாரம் ஐந்து நாட்களிலும், தினமும் ஒரு முட்டை வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 125 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக 'மானியக் கோரிக்கை எண் 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் உணவூட்டுச் செலவினத்திற்காக ஒவ்வொரு இனத்தின் கீழும் 1,000/– ரூபாயும் கூடுதல் முட்டை வழங்குவதற்காக ரூபாய் 50 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# விமர்சனம் எப்போதும் நியாயமானதாகவும், சார்பற்றதாகவும் இருக்க வேண்டும்

**சென்னையில் 16.11.2010 அன்று நடைபெற்ற இந்திய தலைமை தணிக்கைத்துறையின் 150ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

இந்த விழாவில் முதல்வர் அவர்களின் உரையைப் படிக்கும் பெருமை கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் மாபெரும் அமைப்புகளில் ஒன்றான இந்தியத் தலைமைத் தணிக்கை அமைப்பு மற்றும் இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத்துறையின் 150 ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

என்று அய்யன் திருவள்ளுவர் கூறினார்.




இதன் பொருள், "மக்களை நாடி ஆட்சியின் குறைகளைத் தெரிந்து உடனுக்குடன் நிறைவு செய்யாத ஆட்சியாளர்களால் நாள்தோறும் நாடு கெடும்" என்பதாகும்.

நமது ஜனநாயகம் வெற்றிகரமாக செயல்பட, தொடர்ந்து முறைகேடுகளை கண்காணிக்கவும், அத்தகைய தவறுகள் மீண்டும் நிகழாததை உறுதி செய்யவும் ஒருமுறை நமக்குத் தேவையாகும். இதுதான் அரசியல் சட்ட ரீதியில் உறுதி செய்யப்பட்டு, தலைமை தணிக்கை அமைப்பில் செயல்படுத்தப்படும் நவீன தணிக்கை முறையின் அடிப்படையாகும்.

தலைமைத் தணிக்கை அமைப்பின் செயல் நோக்கம் அய்யன் திருவள்ளுவரின் கூற்றுகளில் எதிரொலிப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில், எங்களது அரசு ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு கடமைப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனின் முகத்திலும் சிரிப்பு ஏற்படுவதை உறுதி செய்ய கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 108 அவசர ஆம்புலன்ஸ் சேவை, ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். எங்களது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், என்று கூறினார்.

**தணிக்கைத் துறையின் பழைமையான அலுவலகம்**

பல்வேறு அரசுத் திட்டங்களின் பயன்கள் உரிய பொதுமக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்ய, விழிப்புடனான, அசராத விமர்சகர் தேவை – இந்தப் பாத்திரத்தை உங்களது துறை வகிக்கிறது. இருப்பினும் விமர்சனம் எப்போதும் நியாயமானதாகவும், சார்பற்றதாகவும் இருக்க வேண்டும். அது தீர்க்கமான அடிமட்டப் பணிகளின் அடிப்படையில் மட்டுமே அமைய




வேண்டும். தணிக்கைத்துறை பொது அரங்கங்களில் வெகு அபூர்வமாகவே கேட்கப்படும். இப்படிப் பெயர் தெரியாமலும், தொழில் ரீதியான அணுகு முறையும் இந்த அமைப்பின் நம்பகத் தன்மைக்கு வலுசேர்க்கும்.

பொது சேவையில் 150 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இந்த நிறுவனத்தின் வளமான பாரம்பரியத்தை இன்று நாம் கொண்டாடுகிறோம். அதன் வரலாறு பல தலைமுறைகளைக் கடந்து வந்துள்ளது. அது பல்வேறு விதமான காலங்களைக் கடந்து வந்துள்ளது. பல சவால்களைச் சந்தித்து, நமது நாடு அதற்கென படைத்துள்ள மாபெரும் ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செலுத்தியுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள தலைமை தணிக்கை அலுவலகம் இந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. தணிக்கைத் துறையில் மிகப்பழமையான அலுவலகங்களில் இது ஒன்று என்று அறிகிறேன்.

தணிக்கை அலுவலகம் தணிக்கைப் பணியுடன் மட்டும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அது தமிழக அரசுக்கும் அதன் ஊழியர்களுக்கும் கணக்குமுறை மற்றும் கையாட்சி உரிமை சேவைகளையும் வழங்கியுள்ளது. அது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு ஊழியருடனும் நெருக்கமான இணைப்புகளை வைத்துள்ளது. மாநில அரசுக்கு நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்த சேவைகளை தணிக்கை அலுவலகம் வழங்கி வருகிறது என்பது மாபெரும் சேவையாகும்.

இன்று நாம் தகவல் மற்றும் தகவல் தொடர்புயுகத்தில் வாழ்கிறோம். மக்களின் விழிப்புணர்வும், நல்லாட்சி, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை பற்றி அவர்களது எதிர்பார்ப்புகள் மிக உயர்ந்தவையாகும்.

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரது தேவைகளையும் நிறைவேற்ற, அரசு தொடர்ந்து பல புதிய திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றப் போதுமான நிதி ஆதாரங்களை உருவாக்க வேண்டும்.

நிதி ஆதாரங்கள் மக்களிடமிருந்து திரட்டப்படுவதால், அத்தகைய ஆதாரங்கள் மிகச் சரியான முறையில் செலவு செய்யப்படுவதைக் கோரும் உரிமை அவர்களுக்கு உண்டு. பணம் சரியான முறையில் கணக்கு வைக்கப்பட்டு முறையான வகையில் செலவிடப்படுவதை உறுதி செய்வதில் தலைமை தணிக்கை அமைப்பு முக்கியமான பாத்திரம் வகிக்கிறது. திட்டங்கள் நிறைவேற்றப்படுவது கண்காணிக்கப்பட்டு, அவற்றின் செயல்திறனும் அளவிடப்படுகிறது.

விமர்சனம் செய்யும் அதிகாரம் என்ற இந்த மதிப்புமிக்க உரிமை உங்களுக்கு உள்ளது; இப்படிப்பட்ட தங்குதடையற்ற அதிகாரம் அதே அளவில் பெரும் பொறுப்புடன் வருகிறது. இந்தக் கடமையை மிகச்சிறந்த முறையில் பொது நலனில் மட்டுமே நிறைவேற்ற வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது.

தணிக்கை என்பது உள்ளீடுகள் மற்றும் செயல்முறைகளை கணிப்பதில் தேவையான முன்னேற்றத்தை உருவாக்குவதுடன், வெளியீடுகளையும் விளைவுகளையும் கணிப்பதில் முன்னேற்றம் உருவாக்கினால் மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

உங்களுடைய பாத்திரத்தை நீங்கள் தார்மீக ரீதியில் மிகச்சரியாக நிறைவேற்றி வருகிறீர்கள் என்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். தணிக்கை அலுவலக ஊழியர்கள் என்ற முறையில் உங்களுக்கு ஆய்ந்து நோக்கும் வரலாற்றுப் பாரம்பரியம் உள்ளது. உங்களுடைய பெருமைமிகு வரலாறு மற்றும் பாரம்பரியம் பற்றியும் உங்களுடைய கடந்த கால சாதனைகளை பற்றியும் நீங்கள் நியாயமாகவே பெருமிதமடையலாம்.

தலைமை தணிக்கை அமைப்புடன் மாநில அரசுக்கு சுமுகமான, நல்லிணக்க, பயனுள்ள உறவு உள்ளது. இதேபோல் வருங்காலங்களிலும் நமது நல்லுறவு தொடரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இதை நினைவில் கொள்ளத்தக்க தருணத்தில் நமது ஜனநாயகத்துக்கு பெரும் வலிமையாக அமைந்துள்ள உங்களது பொது சேவை மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

★ ★ ★

# உழவர் சந்தைத் திட்டத்தை இந்தியா முழுவதும் அமல்படுத்த நடவடிக்கை

## புதுடெல்லியில் 21.10.2010 அன்று நடைபெற்ற செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

**தே**சிய அளவில் அமைக்கப்பட்ட செயல் திட்டக் குழுவின் தலைவரும், குஜராத் முதல்வருமான நரேந்திரமோடி அவர்களே, ஆந்திர முதல்வர் ரோசைய்யா அவர்களே, மகாராஷ்டிரா முதல்வர் அசோக்ராவ் சவான் அவர்களே, மத்திய மாநில அரசு அதிகாரிகளே, நண்பர்களே வணக்கம்.


நுகர்வோர் விவகாரங்கள் பற்றிய செயல் திட்டக் குழுவின் முதல் கூட்டத்தில் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உணவுப் பாதுகாப்பு என்பது மத்திய – மாநில அரசுகளின் முழுமுதல் அக்கறையாக உள்ளது. இந்த செயல்திட்டக் குழுவின் பரிசீலனைக்காக உத்தேசிக்கப் பட்டுள்ள விவாதப் பொருள் குறிப்பில் முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு சார்பில் முன் வைக்கப்பட்ட பல ஆலோசனைகள் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு ஏழையெளிய பிரிவினர் மற்றும் பொதுமக்கள் மீது பணவீக்கத்தின் மோசமான விலைகளைக் களைவதில் செயல் துடிப்புடன் பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் பொது விநியோக முறையில் தமிழக மக்களின் உணவான அரிசி கிலோ ஒரு ரூபாய்க்கு குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் வழங்கப்படுவதால் அவர்கள் பண வீக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

**அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் வழங்குகிறது தமிழக அரசு**

தமிழக அரசு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தையும் அமலாக்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ஆட்டா ஆகியவை மானிய



விலைகளில் விநியோகிக்கப்படுகிறது. அத்துடன், 10 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய சிறப்புப் பை மானிய விலையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகிறது. பொதுமக்களிடம் இந்த முன் முயற்சிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

தமிழ்நாட்டில் எங்களது அனுபவத்தின் அடிப்படையில், இந்தக் குழுவின் முன்பு வைக்கப்பட்டுள்ள பொருள்கள் பற்றியும், விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள நடவடிக்கை திட்டம் பற்றியும் எங்களது கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கான விநியோக மார்க்கத்தின் திறனை அதிகரிப்பதைப் பொருத்தமட்டில், விவசாய உற்பத்திப் பொருள்கள் சந்தையில் போட்டியை

அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது என்ற ஆலோசனையை முழுமையாக ஆமோதிக்கிறேன். விவசாய சந்தைகளை ஒருங்கிணைத்து, விவசாய உற்பத்திப் பொருள்களை சோதிக்கவும், தரம் பிரிக்கவும், விதிகளை மேம்படுத்தவும் வேண்டும். சந்தைப் படுத்தல் கட்டமைப்பை கிடங்கு வசதிகளுடன் வலுப்படுத்த வேண்டும்.

விவசாய உற்பத்திப் பொருள்கள் சந்தையில் போட்டியை அதிகரிப்பது விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும் நாம் வேளாண் வாணிபக் குழுக்களின் பாத்திரத்தையும் நாம் முழுமையாக ஒதுக்கி விடக்கூடாது. தமிழ்நாட்டில் நன்கு செயல்படும் வேளாண் வாணிபச் சங்கங்கள் தனியார் வர்த்தகர்கள் கூட்டணி சேர்ந்து விவசாயிகளைக் சுரண்டுவதைத் தடுத்து சந்தையைக் கண்காணிக்கின்றன.

ஊரக சந்தை, விலைகளை நிர்ணயிக்க உதவுவதால் நல்லது என்று பொதுவாக கருத்து உள்ளது. ஆனால், அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்ற பண்டங்கள் விநியோகத்தில் நிச்சயமற்ற தன்மை காரணமாக விலைகளில் ஏற்ற இறக்கம் ஏற்படுவதால் இவற்றை இந்தக் கூட்டத்தில் சேர்ப்பது சரியாக இருக்காது. எங்களது முதல்வர் மற்றும் இதரர்களின் வேண்டுகோளின் அடிப்படையில், மத்திய அரசு அத்தியாவசியப் பொருட்களின் ஊக வர்த்தகத்தை தடைச் செய்துள்ளது. இந்தப் பொருட்கள் தொடர்ந்து ஊக சந்தையிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்று இந்த செயல்திட்டக் குழு பரிந்துரைக்கலாம்.

**உழவர் சந்தைத் திட்டம்**

உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் உள்ள விலை இடையில் உள்ள இடைவெளியைக் குறைக்க இடைத்தரகு செலவீனத்தைக் குறைக்க வேண்டிய தேவை உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் மாநிலத்தில் உழவர் சந்தை என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இங்கு இடைத்தரகர்களை அகற்றி விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்கின்றனர். இந்தச் சந்தைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விலைகளை நிலை நிறுத்துவதுடன் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பெரும் பயனை அளித்துள்ளன. தமிழ்நாட்டில் உழவர் சந்தை, ஆந்திராவில் 'ரயட் பஜார்' போன்று உழவர்களின் சந்தையை அமைக்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க இந்தக் குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யலாம். இத்தகைய சந்தைகளை வளர்த்தெடுக்க நிதியளிப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு அறிவிக்கலாம்.

தகவல் சரிவரக் கிடைக்காதது கடுமையான பிரச்சினையாக உற்பத்தியாளர்களையும், நுகர்வோரையும் பாதிக்கிறது. எனவே பாரபட்சமற்ற முறையில் தகவல் சேகரிக்கவும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தகவல்கள் கிடைக்கவும் சுயேட்சையான அமைப்புகளை உருவாக்க வேண்டியுள்ளது. பயிர் கணிப்பு போன்ற நடவடிக்கைகளில் உள்ளூர் வேளாண் கூட்டுறவு சங்கங்கள், உழவர் குழுக்கள், வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் ஆகியவை ஈடுபடுத்தப்படலாம். இந்த விவரங்கள் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். தூர்தர்ஷனில் 24 மணி நேர தொலைக்காட்சி உழவர் சேனல் இருப்பது அத்தியாவசியத் தேவையாகும்.

உணவுப் பதப்படுத்தல், மதிப்புக் கூட்டுதல் ஆகியவற்றை முன்னுரிமை செயல்பாடாக எடுத்துக் கொள்ள கூட்டுறவுத் துறைக்கு, குறிப்பாக வேளாண் விற்பனைச் சங்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதற்கு பெருமளவு முதலீடு செய்ய வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலையில் பெறும் முதலீடுகள் அடிப்படையில் பல்வேறு சந்தைகளை இணைத்துள்ளன. விவசாயிகளை சந்தைகளுடன் இணைக்க நாம் கணிசமாக முதலீடு செய்ய வேண்டும். செயல் திட்டத்தில் கூறப்பட்டுள்ள வேளாண் கட்டமைப்புகள் அனைத்தும் பாராட்டுக்குரியவை ஆனால் இவற்றை செயல்படுத்த மத்திய அரசின் நிதியுதவி மிக இன்றியமையாததாகும். வலுவற்ற கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவ தற்போதைய திட்டமான தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலமாக மானியம் வழங்குவது திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

எங்களது மாநிலத்தில், அத்தியாவசியப் பொருட்களை கட்டுப்படியான விலைகளில் வாங்கியும், விற்பனை செய்தும் அரசு, கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்கள் மூலமாக வெளிச்சந்தையில் விற்பதன் பயன் நிறைவைத் தருகிறது. இருப்பினும், விலைகளைக் கட்டுப்படுத்த கடுமையான விலை மாற்றங்கள் உள்ள ஒரு சில பொருள்களையாவது உற்பத்தி விலையில் வாங்கி, விற்க வேண்டிய தேவையுள்ளது. விலை நிலை நிறுத்தல் நிதி நிருவாகம் ஒன்றை அமைக்க இந்தக் குழு பரிந்துரைக்கலாம். விலைகள் தாறுமாறாக உயரும் காலங்களில் அரசு நிறுவனங்களும், கூட்டுறவு அமைப்புகளும் அத்தியாவசியப் பொருட்களைத் தெரிவு செய்து வாங்கி, விற்பனை செய்ய இந்த நிதி பயன்படுத்தப்படலாம்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த பொது விநியோக முறையை வலுப்படுத்துதல் பெருமளவு உதவும் என்று நம்புகிறேன். பொது விநியோக முறை மூலமாக பருப்பு வகைகள், தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்ய அரிசி – கோதுமை போலவே மத்திய அரசு பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய வேண்டும். அல்லது இறக்குமதி செய்ய வேண்டும். தற்போதைய முறையான மத்தியப்

பொதுத்துறை நிறுவனங்களால் இறக்குமதியைச் சார்ந்து இருப்பது பயனுள்ள முறையில் செயல்படவில்லை.

பொதுவிநியோக முறை மூலம் விநியோகிக்க தமிழ்நாடு மாநில குடிமைப் பொருள் கழகத்தின் மூலம் உணவு தானியங்களை கொள்முதல் செய்கிறது.


பருப்பு வகைகள் இந்த முறையின் கீழ் வழங்கப்படும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும். போதுமான அளவு கிடைக்காதது விலை அதிகரிப்புக்கும் உயர்வுக்கும் வழிவகுத்து நமது மக்களின் சத்துணவு தேவை நிலைமையை மோசமாகப் பாதிக்கிறது. பொது விநியோக முறையில் அரிசி, கோதுமை ஆகியவற்றுக்குச் செய்வது போல மத்திய அரசு குறைந்தபட்ச அளவுக்கு பருப்பு வகைகளை இருப்பு வைத்திருக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் லாபம் கிடைக்கவும், பயிரிடப்படும் பரப்பை அதிகரிக்கவும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு மேல் ஊக்கத்தொகை வழங்கப்படலாம்.

1955ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் திருத்தங்களை அமலாக்கும் பிரச்சினையில் எங்களது மாநிலம் ஏற்கெனவே கருத்துக்களை தெளிவாகத் தெரிவித்துள்ளது. இந்தச் சட்டத்தின் பிரிவுகளை மேலும் கடுமையாக்க வேண்டிய தேவை உள்ளது. அதே விஷயங்களை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இறுதியாக, வேளாண் நடவடிக்கைகளுக்கும், சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டியுள்ளது.

மத்திய அரசும், மாநில அரசுகளும் செயல்படுத்த வேண்டிய தெளிவான உத்திகளையும், காலம் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை திட்டத்தையும் உருவாக்குவதற்கு இன்றைய விவாதங்கள் நமக்கு உதவும் என்று நம்புகிறேன். இந்த வாய்ப்புக்காக மீண்டும் நன்றி தெரிவிக்கிறேன்.



## விவசாய மின் இணைப்புக்கோரி நிலுவையிலுள்ள 2 இலட்சம் விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு!

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு!

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் 40 ஆயிரம் விவசாய மின் இணைப்புகள் அளிக்கப்படுகின்றன.


தற்போது விவசாய இணைப்பு கோரி சுமார் 4 இலட்சத்து 85 ஆயிரம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆண்டுக்கு 40 ஆயிரம் இணைப்புகள் வீதம் நிலுவையில் உள்ள அனைத்து விண்ணப்பங்களுக்கும் இணைப்பு வழங்க குறைந்தபட்சம் 12 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் ஆகும்.

விவசாயிகளின் நலன் கருதி, 10 வருடங்களுக்கு மேல் நிலுவையில் உள்ள சுமார் 2 இலட்சம் விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15–10–2010 அன்று அறிவித்துள்ளார்.

அதன்படி, முதல் 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2010 டிசம்பர் மாதத்திற்குள்ளும்; அடுத்த 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 மார்ச் மாதத்திற்குள்ளும்; அதற்கடுத்த 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 ஜூன் மாதத்திற்குள்ளும்; எஞ்சிய 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 செப்டம்பர் மாதத்திற்குள்ளும் மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்க 100 மணி நேரம் செலவிட்டதைப் பெருமையாகக் கருதுகிறேன்!

- சென்னையில் 15.11.2010 அன்று 2,900 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் தனிநபர் கடன் வழங்கும் விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை



மகளிர் சுயஉதவிக் குழுக்களான உங்கள் அனைவரின் சார்பில் இங்கு பேசிய சக்திக் குழுவைச் சேர்ந்த திருமதி. கஸ்தூரி அவர்களும், செண்பகம் குழுவைச் சேர்ந்த திருமதி. விஜயலட்சுமி அவர்களும் சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்துள்ளார்கள்.

**முதலிடத்தில் பெண்களாகிய நீங்கள்தான் இருக்கிறீர்கள்!**

மிகுந்த எழுச்சியோடு நடைபெறும் இந்த விழாவில், 1,700 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் சுழல்நிதி மானியத்துடன் கூடிய வங்கிக்கடனும், சொர்ண ஜெயந்தி நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1,100 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் சுழல்நிதி மானியத்துடன் கூடிய வங்கிக் கடனும், 100 தனி நபர்களுக்கு 20 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் தனிநபர் கடனும் ஆக மொத்தம், இவ்விழாவின் மூலம் 2,800 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், 100 தனி நபர் களுக்கும் சுமார் 16 கோடி ரூபாய்க்கு சுழல்நிதி மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்குகிறது.

இங்கு பேசிய தலைமைச்செயலாளர் அவர்கள் பெண் என்ற உரிமையோடு ஒன்றைக் குறிப்பிட்டார். ஆயிரம் மகளிர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாக இருந்தாலும் முதல் இரண்டு வரிசையில் ஆண்கள் தான் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று வருத்தப்பட்டார். நான் கூட இதை கவனித்தேன். அதிகாரிகளிடத்தில் இது தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளேன்.

முதல் வரிசையில் ஆண்கள் இருந்தாலும், முதலிடத்தில் பெண்களாகிய நீங்கள் தான் இருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக ஒரு பெண்தான் இருக்கிறார். இதைவிட சிறப்பான எடுத்துக்காட்டு தேவையில்லை. தலைவர் கலைஞர் ஆட்சியில் பெண்கள் பெருமைப்படத்தக்க வகையில் சிறப்பான முன்னேற்றம் பெற்றுள்ளனர்.

2006-07க்கு முன் நகர்ப்புர சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. தலைவர் கலைஞர் தலைமையில் 5ஆம் முறையாக கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்பு தான், மகளிர் மேம்பாட்டு நிறுவனம் எனது துறையான ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் வந்தது. அதன் பிறகு தான் நகர்ப்புர குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.




ஊரக பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியாக ரூபாய் 10,000 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது போல், மாநில அரசு நிதியிலிருந்து நகரப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வுப்பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி தலா 10,000 ரூபாய் மானியமாக 2008ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இதுவரை மாநிலத்திலுள்ள 99,245 நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 99.25 கோடி சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2010–11 ஆம் ஆண்டு ரூ.70 கோடி சுழல்நிதி மானியம்**

சுழல்நிதியைப் பொறுத்தவரை, தகுதி வாய்ந்த அனைத்து குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கவேண்டும் என்ற வகையில் 2008–09 ஆம் ஆண்டு ரூ.150 கோடியும், 2009–10 ஆம் ஆண்டு ரூ.70 கோடியும் வழங்கப்பட்டுள்ள நிலையில், 2010–11ஆம் ஆண்டு மீண்டும் ரூ.70 கோடியும் சுழல்நிதி மானியமாக வழங்க அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் இது வரை சுழல்நிதி பெற்ற குழுக்கள் 4,17,568 ஆகும். இதில் 3,24,024 குழுக்கள் அதாவது 78 விழுக்காடு கடந்த நான்கு ஆண்டுகளில் சுழல்நிதி பெற்றுள்ளன, என்பதையும் தெரிவிப்பதில் பெருமைப் படுகிறேன். இக்குழுக்கள் ரூபாய் 324 கோடி மானியத்துடன் சேர்த்து பெற்ற மொத்த சுழல்நிதி கடன் ரூபாய் 1697.28 கோடி ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளாக அனைத்து மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களையும் நேரடியாக சந்திக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த சுழல்நிதி என்னால் குழுக்களுக்கு விழாக்களில் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

2007–08ஆம் ஆண்டில் 2,100 சுயஉதவிக் குழுக்கள், 2008–09ஆம் ஆண்டில் 75,273 சுயஉதவிக் குழுக்கள், 2009–10ஆம் ஆண்டில் 47,603 சுயஉதவிக் குழுக்கள் 2010–11 ஆம் ஆண்டில் தற்போது வழங்கப்படும் சுழல்நிதியோடு சேர்த்து 11,628 சுயஉதவிக் குழுக்கள், ஆக மொத்தம் 21.83 இலட்சம் மகளிரை உறுப்பினராகக்கொண்ட 1,36,454 குழுக்களுக்கு சுழல்நிதி என்னால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

**எவ்வளவு குழுக்களானாலும் நேரடியாக காசோலைகளை நானே வழங்குகிறேன்!**

இதற்காக நான் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் எண்ணிக்கை 90 ஆகும். மேலும், எதிர்வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குள் சுமார் 6.50 இலட்சம் மகளிரை உறுப்பினராகக்கொண்ட 40,000 குழுக்களுக்கு சுழல்நிதி என்னால் வழங்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. சென்னை மேயர் அவர்கள் பேசும்போது, எத்தனை குழுக்களாக இருந்தாலும் நானே நேரிடையாக காசோலைகளை வழங்குவதாக குறிப்பிட்டார். நூறு, ஆயிரம், மூவாயிரம் ஏன் அதையும் தாண்டி எவ்வளவு குழுக் கள் இருந்தாலும் நானே நேரிடையாக காசோலைகளை வழங்கி வருகிறேன். இது உங்களுக்கெல்லாம் தெரியும்.

நேற்றைய தினம் (14.11.2010) ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற விழாவினையும் சேர்த்து தமிழ்நாட்டில் உள்ள 1,58,876 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக்கடன்கள் என்னால் நேரடியாக வழங்க 99½ மணி நேரத்திற்கு மேலாக செலவிடப் பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி மூலம் நான் சதம் அடிக்க உள்ளேன். சுமார் 3 ஆயிரம் குழுக்களுக்கு சுழல்நிதி கொடுக்க ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும். ஆகவே, இன்று சதத்தை, அதாவது 100 மணி நேரத்திற்கும் மேலாக நேரத்தை செலவிட்டு மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சுழல்நிதியினை வழங்கியுள்ளேன். இன்றும் அனைவருக்கும் சுழல் நிதியை கொடுத்துவிட்டு தான் இங்கிருந்து செல்வேன். இவ்வளவு மணிநேரம் செல விடப்பட்டது என்று கூறினேன். இதை நான் செலவாக கருதவில்லை, பெருமையாகவே கருதுகிறேன்.

இங்கு பேசிய ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர் அவர்கள், நான் சுழன்று சுழன்று கொடுப்பதால் தான் சுழல்நிதி என்று பெயர் வந்ததாக குறிப்பிட்டார்.

இதற்குக் காரணம் உங்களின் ஊக்கம் தான். 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தலைவர்

**தலைவர் கலைஞர் ஆட்சியில் பல திட்டங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட்டுள்ளன. 1929 ஆம் ஆண்டு ஈரோட்டு சிங்கம் தந்தை பெரியார் அவர்கள் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்க தீர்மானம் நிறைவேற்றினார். இதனை 60 ஆண்டுகள் கழித்து 1989ஆம் ஆண்டு மகளிருக்கு சொத்தில் சம உரிமையினை சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானமாக கொண்டு வந்து நிறைவேற்றியவர் தான் தலைவர் கலைஞர்.**

கலைஞர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களை தொடங்கி வைத்த போது, இந்த குழுக்கள் அரசியலுக்காகவோ, தேர்தல் பிரச்சாரத்திற்காகவோ தொடங்கப் படவில்லை. சுயமாக நீங்கள் சிந்திக்க வேண்டும், சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்றால் சொந்தக் காலில் நிற்க வேண்டும். வாழ்க்கையில் அந்த உணர்வைப் பெற சிறு தொழில்களைத் தொடங்க நிதி தேவை. அதை வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியில் பெற்று உங்கள் வாழ்க்கையை வளமாக்கவும், பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற நோக்கத்திலும் தான் இந்த குழுக்கள் தொடங்கப்படுகிறது என தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

தற்போது, மகளிர் சுய உதவிக் குழுக்கள் படிப்படியாக வளர்ந்து ஒரு மாபெரும் இயக்கமாக கம்பீரமாக வளர்ச்சி அடைந்துள்ளன. மகளிர் சுயஉதவி குழுக்கள் பொறுத்தவரை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மேயர் இங்கே பெருமையாக சுட்டிக்காட்டியது போல் நகர்புரங்களிலும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நான் வங்கி அதிகாரிகளுடனும் துறை அலுவலர்களுடனும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் பணிகளை ஆய்வு செய்த போது அவர்கள் ஒன்றை குறிப்பிட்டார்கள். 99 சதவீதம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய கடனை முறையாக திருப்பி செலுத்தி விடுகிறார்கள். எனவே தான் போட்டா போட்டி போட்டு வங்கிகள் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் உதவிகளை வழங்குகிறது. இது ஒட்டு மொத்த தமிழ்நாட்டிற்கு பெருமை. பெண்கள் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.

### பெண்களுக்கு சொத்தில் சம உரிமை

தலைவர் கலைஞர் ஆட்சியில் பல திட்டங்கள் பெண்களின் முன்னேற்றத் திற்காக நிறை வேற்றப்பட்டுள்ளன. 1929 ஆம் ஆண்டு ஈரோட்டு சிங்கம் தந்தை பெரியார் அவர்கள் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்க தீர்மானம் நிறைவேற்றினார். இதனை 60 ஆண்டுகள் கழித்து 1989 ஆம் ஆண்டு மகளிருக்கு சொத்தில் சம உரிமையினை சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானமாக கொண்டு வந்து நிறைவேற்றியவர் தான் தலைவர் கலைஞர். பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தை 1989 ஆம் ஆண்டு ரூ.5 ஆயிரம் என வழங்கி, 1996 ஆம் ஆண்டு ரூ. 10 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கினார். தமிழகத்தில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம் இத்திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தால் ரூ.15 ஆயிரம் வழங்குவோம் என தேர்தல் வாக்குறுதியாகவே அளித்து அதனை கலைஞர் அவர்கள் நிறைவேற்றினார். ஓரிரு ஆண்டுகளுக்கு பின் ரூ.20 ஆயிரமாக உயர்த்தினார். தற்போது திருமண உதவித் திட்டத்திற்கு ரூ. 25 ஆயிரம் வழங்குகிறார். கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகை எனத் தொடர் சாதனைகளையும் திட்டங்களையும் நிறை வேற்றி வருபவர் தான் தலைவர் கலைஞர்.

ஐ.நா சபையில் முதல் பெண் தலைவராக விளங்கியவர் விஜயலட்சுமி பண்டிட், முதல் பெண் ஆளுநர் கவிக்குயில் சரோஜினி நாயுடு, தேர்தலில் பெண்களின் வாக்குரிமைக் காக முதலில் குரல் கொடுத்து சட்டமேலவையில் இடம் பெற்றவர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் ஆவார். முதல் பெண் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார். சமூக தொண்டிற்காக பாரத ரத்னா விருது பெற்ற அன்னை தெரசா என பெண்களுக்கு பெருமை சேர்த்த வர்கள் பலர் உண்டு.

தமிழ்நாட்டில் தலைமைச் செயலாளரும், அதற்கு முன்னர் உள்துறை செயலாளராகவும் இருந்தவர் திருமதி. மாலதி அவர்கள். லத்திகா சரண் என்ற பெண்மணியே காவல்துறைத் தலைவராக தமிழகத்தில் உள்ளார். பெண்களின் முன்னேற்றத்தை அடிப்படை யாகக் கொண்டு ஆட்சி நடத்துபவர் தான் தலைவர் கலைஞர். ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமும், நாட்டின் முன்னேற்றமும் பெண்களின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, நீங்கள் எல்லாம் மகளிர் சுயஉதவிக் குழு என்ற அமைப்பை பயன்படுத்தி, உங்கள் வாழ்க்கையையும், நாட்டையும் வளமாக்க வேண்டும் என உங்களை எல்லாம் அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். ★

# பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் 13-11-2010 அன்று நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.**




கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் சட்டப்பேரவை தொகுதியில் அடங்கியிருக்கும் ஒசூரில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். திறப்பு விழா – பொதுப்பணித்துறை சார்பில் டிஜிட்டல் நூலகம், பள்ளிக் கட்டடங்கள், பணியாளர் குடியிருப்பு கட்டடங்கள் உள்ளிட்ட 11 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 22 பணிகளுக்கும்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 2 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50 தனிமின் விசைத் திட்டப் பணிகளுக்கும் என 14 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 72 பணிகள் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

**நலத்திட்ட உதவிகள்**

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கும், பொதுப்பணித் துறையின் சார்பில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிபுரியும் மகளிர்களுக்கான தங்கும் விடுதி பணிக்கும், என 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

மேலும், இந்த விழாவின் மூலம் 463 சுயஉதவிக் குழுக்களில் உள்ள 6,945 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அரசு மானியம் தலா ரூபாய் 10 ஆயிரம் மற்றும் வங்கிக் கடன் தொகை என ரூபாய் 3 கோடியே 24 இலட்சம் ரூபாயும், 322 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பொருளாதாரக் கடனாக 96 இலட்சம் ரூபாயும், 306 சுயஉதவிக் குழுக்களில் உள்ள 4,590 உறுப்பினர்களுக்கு 11 கோடியே 51 இலட்சம் ரூபாயும், தொழில் திறன் பயிற்சி பெற்ற 12 பயனாளிகளுக்கு பணிநியமன ஆணையும் என மொத்தம் 1091 குழுக்களுக்கு 15 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், 12 பயனாளிகளுக்கு பணிநியமன ஆணையும் வழங்கப்படவுள்ளது.

அதுமட்டுமன்றி, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 102 பயனாளிகளுக்கு 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான சாவி வழங்கப்படுகிறது. இதைத்தவிர, 5 பயனாளிகளுக்கு DRI கடன் தொகை என 1 இலட்சம் ரூபாயும்.

வருவாய்த் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் சார்பில் 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 58 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் என 16 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,283 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் இன்றைய தினம் வழங்கப்படுகின்றன.

ஆக மொத்தம் இன்றைய தின விழாவின் மூலம் சுமார் 32 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அடிக்கல் நாட்டும் பணிகள், திறப்பு விழா பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் நாட்டிலேயே முதன் முதலில் தருமபுரி மாவட்டத்தில்தான், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. சுயஉதவிக் குழுக்கள் அரசியலுக்காகவோ, கட்சி வேலைக்காகவோ, தேர்தலுக்காகவோ துவங்கப்படவில்லை. சகோதரிகள் தன்னம்பிக்கையுடன் சொந்த காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக்கு அக்குழுவின் வளர்ச்சியே காரணம்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களை பொறுத்தவரை, தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 712 குழுக்கள் உள்ளன.இதில் 74 இலட்சத்து 66 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூபாய் 2,773 கோடி. இதில் ஊரக பகுதியில் 3 இலட்சத்து 28 ஆயிரத்து 217 குழுக்களும் நகர்ப்புர பகுதியில் 1 இலட்சத்து 53 ஆயிரத்து 495 குழுக்களும் உள்ளன.

தமிழ்நாட்டில் இதுவரை 4,17,568 குழுக்கள் சுழல்நிதி பெற்றுள்ளன. மே 2006இல் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 1,65,894 மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதியதாக அமைக்கப் பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில் மட்டும் (2010–11) 40 ஆயிரத்து 401 குழுக்கள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன. மே 2006இல் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 3,24,024 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளன.

**கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.8,080 கோடி வங்கிக் கடன்**

கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் ரூபாய் 1,644 கோடி வங்கிக் கடனும் ரூபாய் 76 கோடி சுழல் நிதியும் வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூபாய் 8,080 கோடி வங்கிக் கடனும் ரூபாய் 328 கோடி சுழல் நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 158 சுயஉதவிக் குழுக்கள் உள்ளன.

2006 முதல் இதுநாள் வரை 5778 புதிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை அமைக்கப்பட்டுள்ள மொத்த மகளிர் சுய உதவிக்குழுக்களில் 7 ஆயிரத்து 740 சுயஉதவிக் குழுக்களுக்கு 54 கோடியே 18 இலட்சம் ரூபாய் சுழல் நிதி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளன.

736 மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள 11040 உறுப்பினர்களுக்கு 36 கோடியே 80 இலட்சம் பொருளாதாரக் கடன் வழங்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மூன்று முறை நேரில் வந்திருந்து 7110 சுயஉதவிக்குழுக் களுக்கு சுழல்நிதி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கியுள்ளேன்.

**தெரியுமா?**

**விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை நேரடியாக உழவர் சந்தையில் விற்பது, காய்கறிகளின் உற்பத்தியை வழக்கமான விளைச்சலை விட இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்வது மற்றும் பொதுமக்கள் காய்கறிகளை தட்டுப்பாடின்றி குறைந்த விலையில் பெறுவதுமான "பசுமைக் குடில்' என்னும் புதிய திட்டம் அறிமுகம்.**



தமிழ்நாட்டில் உள்ள 1,56,785 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் வங்கிக் கடன்கள் என்னால் நேரடியாக வழங்க 97 மணி நேரத்திற்கு மேலாக செலவிடப்பட்டு உள்ளது.

**21 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் கலைஞர் வீடு வழங்கும் திட்டம்**

21 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஊரகப் பகுதியில் குடிசைகளுக்கு பதிலாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் 6 ஆண்டுகளில் செயல் படுத்தப்படும் என நடப்பு ஆண்டிற்கான மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் திருச்சி மாந கரில் 3.3.2010 அன்று கலைஞர் வீடு வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய ஊரக வீட்டுவசதித் திட்டம் எந்த மாநிலத்திலும் செயல் படுத்தப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தில் முதல் ஆண்டில் 2,250 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 22 இலட்சத்து 3 ஆயிரத்து 711 குடிசை வீடுகள் கண்டறியப்பட்டு 12,27,570 குடிசை வீடுகள் உடனடியாக கட்ட தகுதியானவை என கண்டறியப் பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 25,575 குடிசைவீடுகள் கண்டறியப்பட்டு இந்த நிதியாண்டில் 5,291 வீடுகள் கட்டப்பட உள்ளது. நவம்பர் மாதத்திற்குள் 700 வீடுகள் முடிக்கப்படவுள்ளது. இன்று 102 பயனாளிகளுக்கு வீட்டிற்கான சாவி வழங்கப்பட்டது.

அடுத்த 6 ஆண்டுகாலத்தில் அனைத்து குடிசை வீடுகளும் கான்கிரீட் வீடுகளாக கட்டித் தரப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் ஒசூரில் அரசு கலைக் கல்லூரி மற்றும் தொழில் புரியும் ஆண்களுக்கான தங்கும் விடுதி அமைத்து தர கோரிக்கை வைத்தார். தமிழக முதல்வர் மற்றும் நிதித்துறை அலுவலர்களுடன் கலந்துபேசி கோரிக்கை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன். அரசு நலத்திட்ட உதவிகள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள் கிறேன். ★

**தெரியுமா ?**

**33 அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 653 உறுப்பினர்களுக்கு 108 கோடியே 42 இலட்சத்து 22 ஆயிரத்து 372 ரூபாய் செலவில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.**

# அனைத்துப் பேரூராட்சிப் பகுதிகளிலும்
# கலைஞர் வீடு வழங்கும் திட்டம்
## – தமிழக அரசு அறிவிப்பு


**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில், "கலைஞர் வீடுவழங்கும் திட்டம்" சம்மந்தமான ஆய்வு 23.11.2010 அன்றுபுனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 4 ஆயிரத்து 63 வீடுகள் நிறைவு பெற்றிருப்பது அறிந்து முதல்வர் கலைஞர் தொடர்புடைய அதிகாரிகளுக்கும், பயனாளிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார். இந்த ஓர் ஆண்டிலேயே – கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், தேனி, மதுரை, கரூர், திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி – ஆகிய 13 மாவட்டங்களில் கணக்கெடுக்கப்பட்ட குடிசைகள் அனைத்தும் "கான்கிரீட்" வீடுகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

மேலும், அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் "கலைஞர் வீடு வழங்கும் திட்ட"த்தை, தமிழகத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்றும்; பேரூராட்சிகளில் உள்ள குடிசைகளைக் கணக்கெடுத்து, அடையாள அட்டைகள் வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்கள், குளிர்ப் பிரதேசங்கள் என்பதால், அந்தப் பகுதிகளில் வாழும் ஏழையெளியோர் ஓலைக் குடிசைகளுக்குப் பதிலாக, தகரத்தாலும், பிளாஸ்டிக்காலும் வேயப்பட்ட சிறு வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். சிறப்பு நேர்வாக, மலைப் பிரதேசங்களில் ஏழையெளியோர் வாழ்ந்து வரும் இத்தகைய வீடுகளையும் கணக்கெடுத்து, அடையாள அட்டைகள் வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

"கலைஞர் வீடு வழங்கும் திட்ட"த்தின்கீழ், தமிழகத்தில் குடிசை வீடுகளே இல்லை எனும் புதிய



வரலாற்றைப் படைப்பதற்காக, தமிழகத்தின் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 21 இலட்சம் குடிசை வீடுகளை, தமிழ்நாடு அரசின் முழு நிதி உதவியுடன் 6 ஆண்டுகளில் "கான்கிரீட்" வீடுகளாக மாற்றித் தருவது என்றும்; முதல் கட்டமாக இந்த ஆண்டில் (2010–2011), 3 இலட்சம் குடிசைகளுக்குப் பதில், புதிய "கான்கிரீட்" வீடுகளைக் கட்டுவதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் வீதம் மானியமாக வழங்கிட ஏற்கனவே முடிவு செய்து, அதன்படி 3 இலட்சம் "கான்கிரீட்" வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வீடுகள் அனைத்தும் 2011, ஜனவரி மாதத்திற்குள் நிறைவுறும்.

இன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர்.பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

★

# நலமான தமிழகம் திட்டம்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
26.11.2010 அன்று, காஞ்சிபுரம் மாவட்டம்
செம்மெஞ்சேரியில் நடைபெற்ற விழாவில்
**"நலமான தமிழகம் திட்டத்தினை"** தொடங்கிவைத்து,
செம்மெஞ்சேரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள
அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்து,
ஒக்கியம் துரைபாக்கத்தில் புதிதாகக் கட்டப்படவுள்ள
ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய
உரை.

**டை**ம்ஸ் பவுண்டேஷன் சார்பில் அதன் சிறப்பான ஒத்துழைப்போடு செம்மஞ்சேரியில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடத் திறப்பு விழாவும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும், அதற்கெல்லாம் முத்தாய்ப்பாக உன்னத திட்டமான "நலமான தமிழகம் திட்டம்" தொடக்க விழா ஆகியவற்றை ஒருங்கிணைத்து நடைபெறும் இவ்விழாவினில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றுவதில் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் அவர்களுக்கும், செயலருக்கும், அலுவலர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான 10. 5 கிரவுண்டு நிலம், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக 2008ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு, டைம்ஸ் பவுண்டேசன் நிறுவனத்தால் ஈஷா சுனாமி நிதியிலிருந்து ரூபாய் 2 கோடியே 67 இலட்சம் செலவில் 10,650 சதுர அடியில், அனைத்து வசதிகளுடன் கூடிய இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு, இன்றைக்கு பொதுமக்களின் வாழ்த்துக்களோடு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதை திறந்து வைத்து நான் உள்ளே சென்று பார்த்த போது, இங்கு பேசிய அனைவரும் பெருமையாக குறிப்பிட்டதை போல் இந்த கட்டடம் தனியார் மருத்துவமனை போல் காட்சி அளிக்கிறது. அதையும் தாண்டி சொல்வதானால் வெளிநாடுகளில் உள்ள ஐ.டி நிறுவனங்களைப் போல் காட்சியளிக்கிறது. கட்டடத்தை திறந்து வைத்ததோடு இந்த விழா முடிந்தது என்று இல்லாமல் – மருத்துவர்களும் பணியாளர்களும் இதை கட்டிக்காக்க வேண்டும். பொது மக்களும் இதை நன்றாகப் பயன்படுத்தி பேணி பாதுகாக்க வேண்டும். இது போன்ற சிறப்பான சேவைகள் தொடர்ந்திட இந்த ஆட்சி தொடர வேண்டும் என்பதை தான் நான் உங்களுக்கு இந்த விழாவில் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.



30 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில், குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்கு, தேவையான உபகரணங்கள், குடும்பக் கட்டுப்பாடு

சிகிச்சைக்கென வசதிகள், பிரசவ அறை, பிறந்த குழந்தைகள் பாதுகாப்பு அறை, பரிசோதனைக் கூடம், மருந்தகம், சிறந்த மருத்துவப் பிரிவு மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் முழுமையாக செயல்படுவதற்கு தேவையான அனைத்து தளவாடப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது உள்ளபடியே பாராட்டுக்குரியது. இதுதவிர மருத்துவ சேவைக்குத் தேவையான உபகரணங்களான கர்ப்பிணிகளை பரிசோதிக்கும் ஸ்கேன் கருவி (Ultra Sonogram) சுருள்படச் சாதனம் (ECG), நடமாடும் எக்ஸ்ரே மிஷின், இரத்த பரிசோதனை செய்ய பயன்படும் ஆட்டோ அனலைசர், சிசு பராமரிப்புக்குத் தேவையான கருவிகள் உள்ளிட்டவை டைம்ஸ் பவுண்டேஷன் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக டைம்ஸ் பவுண்டேஷன் அமைப்பிற்கு தலைவர் கலைஞர் அவர்கள் சார்பாக நன்றியினை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். ஒக்கியம் துரைப்பாக்கத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட ரூபாய் 57 கோடியே 75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று தொடங்கப்பட்ட நலமான தமிழகம் திட்டம் பற்றி குறிப்பிட்டுச் சொல்வதானால் மக்களிடம் நேரடியாகச் சென்று மருத்துவ உதவிகளை செய்வதாகும். கிராமப்புரங்களில் நீரிழிவு நோய் மற்றும் இரத்தக் கொதிப்பு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நீரிழிவு நோய் மற்றும் இரத்தக் கொதிப்பு வருவதற்கு வாய்ப்பு உள்ள நபர்களை கண்டறியவும், நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்ட நபர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கவும், "நலமான தமிழகம்" என்னும் திட்டம் இங்கு பேசியவர்கள் பெருமையாக குறிப்பிட்டதைப்போல் இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்த நோய்களைக் கண்டறிவதற்காக தமிழகத்தில் கிராமப்புரங்களில் 2 இலட்சத்து 35 ஆயிரம் தன்னார்வலர்களை தேர்வு செய்து பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. கிராமப்புரத்தில் வாழும் 1. 2 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட 2 கோடியே 11 இலட்சம் நபர்கள், இந்த நலமான தமிழகம் திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள். நலமான திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் மூலம் தமிழக மக்களின் நலன் காக்கப்படும். தலைவர் கலைஞர் அவர்கள் 5 ஆம் முறையாக முதல்வராக பொறுப்பேற்றது முதல் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல சிறப்பான சாதனைகளை செய்துவருகிறார்.

உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் குடிசையில் வாழும் குப்பனும், நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த சுப்பனும் கூட பெரும் பணக்காரர்கள் பெறும் உயரிய சிகிச்சையை பெறுகிறார்கள். சில நேரங்களில் பெரிய அறுவை சிகிச்சையை செய்ய தனியார் மருத்துவமனைகளை அணுக வேண்டியுள்ளது. பெரும் பொருட்செலவில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் ஏழைகளுக்கும் கிடைத்திடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்திட்டம் இந்தியாவில் மட்டும் அல்ல உலகளவில் பாராட்டுகளை பெற்றுள்ளது. பல மாநிலங்களும், பல உலக நாடுகளும் இந்த திட்டத்தை செயல்படுத்திட முனைந்துள்ளனர்.

அதேபோல் 108 அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டை முதல் மாநிலமாகத் தேர்ந்தெடுத்து உள்ளது. அதற்கான விருதினை இந்தியாவின் துணை ஜனாதிபதி அவர்களிடமிருந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை முதன்மைச் செயலாளர் பெற்று வந்துள்ளார். மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்திய அளவில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் என்ற அடிப்படையில் சுகாதாரத் துறையில் தமிழக அரசு செய்து வரும் பல்வேறு சீர்திருத்தங்களுக்காகவும், உன்னதமான பல புதிய திட்டங்களை நிறைவேற்றி வருவதற்காகவும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அரசு கூட்டு முயற்சியில் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காகவும், தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2009–ஆம் ஆண்டிற்கான முதல் பரிசை வழங்கியுள்ளது. 2009–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் கொண்டு வரப்பட்ட திட்டங்களுக்காக, அறிவியல் மேம்பாடு மற்றும் ஊடகக் கல்வி மையம் வழங்கும் "ஈ இந்தியா 2009" என்ற விருதினையும் பெற்றுள்ளது. பிறப்பு இறப்புகளை பதிவு செய்வதில் தமிழகம் இரண்டாவது விருதினை பெற்றுள்ளது. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருவதற்காக "ஈ – இந்தியா 2010" என்ற விருதினை தமிழ்நாடு பெற்றுள்ளது. இதுபோல் பல விருதுகளை பெற்றுவரும் மக்கள் நல்வாழ்வுத்துறை தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின் படி சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. பொது மக்களும் இத்துறையின் திட்டங்களை பயன்படுத்தி தங்கள் வாழ்வினை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

★ ★ ★

# தொழில் தொடங்குவதற்கு தமிழக அரசு அளித்திடும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வீர்!

ஜப்பானிய உயர்மட்டக் குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை




ஜப்பானிய நிறுவனங்கள் மிகவும் விரும்பி முதலீடு செய்யும் மாநிலமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. இந்தியாவில் தற்போது 728 ஜப்பானிய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளில் தமிழகத்தில் மட்டும் 304 நிறுவனங்கள் (ஒரு சில அதன் கிளை நிறுவனங்கள் உள்ளிட்டவைகளோடு) செயல்பட்டு வருகின்றன.

கிளை நிறுவனங்கள் இல்லாமல் 240 ஜப்பானிய நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்களாகவோ அல்லது 100 சதவிகித மானியத்துடனோ தமிழகத்தில் இயங்கி வருகின்றன. அவைகளில் குறிப்பிடத்தக்கவை நிசான், டோஷிபா, மிட் சுபிஷி, மிட்சுயி, யுனிபிரஸ் கோமாட்சு என்பனவாகும்.

ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதில் ஒன்று 2010 ஜூலை மாதம் அந்நாட்டிற்கு உயர்மட்ட குழு ஒன்றை அனுப்பி தமிழகத்தில் உள்ள "வாய்ப்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்குகளை நடத்தியது. இந்த கருத்தரங்குகள் மூலம் ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து தமிழகத்திற்கு நல்லதோர் வாய்ப்பு கிடைத்தன.

தமிழக அரசின் இந்த முதலீடுகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளை அடுத்து 30 பேர் கொண்ட ஹிரோஷிமா அரசின் உயர் மட்டக் குழு ஒன்று ஆளுநர் ஹிடேஹிகோ யுசாகி தலைமையின் கீழ் தமிழகத்திற்கு நவம்பர் 7 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை பயணம் மேற் கொண்டுள்ளது. இதையடுத்து தமிழக அரசின் தொழிற்துறை வழிகாட்டுப் பிரிவு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி பிரிவுக்கும் ஹிரோஷிமா அரசின் தொழிற்துறை மற்றும் தொழிலாளர் பிரிவுக்கும் இடையே 8.11.2010 அன்று சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஹிரோஷிமா அரசின் ஆளுநர் ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக அரசின் சார்பில் வழிகாட்டுப் பிரிவு செயல் துணைத் தலைவர் எம். வேல்முருகன் மற்றும் ஹிரோஷிமா






அரசின் சார்பில் தொழிற்துறை இயக்குநர் டோஷிஇகோ ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தமிழ்நாட்டிற்கும் ஹிரோஷிமாவுக்கும் இடையே பொருளாதார கூட்டுறவு வளர்ப்பதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோளாகும். அத்துடன் தமிழகத்தில் மேலும் பல்வேறு ஜப்பான் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளைச் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் ஜப்பானிய உயர்மட்டக் குழுவினரிடையே மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், தமிழகத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகளை வெகுவாக குறிப்பிட்டார். தொடர்ந்து, தமிழக அரசு அளிக்கும் சிறந்த வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளவும் கேட்டுக் கொண்டார்.

அதுமட்டுமின்றி, சென்னைக்கு அருகே ஜப்பானிய தொழில் நிறுவனங்களுக்கான அமைப்பு ஒன்றை (கிளஸ்டர்) ஏற்படுத்த தமிழக அரசு திட்டமிட்டிருப்பதாகவும், குறிப்பாக நடுத்தர நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அந்த அமைப்பை ஏற்படுத்த உள்ளதாகவும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.


இந்நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் ஹிரோஇடோ யுசாகி, தமிழகம் மற்றும் தங்கள் பகுதிக்கும் இடையே பொருளாதார கூட்டுறவிற்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகவும், தமிழகத்தின் முதலீடு செய்வதால் ஏற்படும் பலன்களை கருத்தில் கொண்டு, இப்படியொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள தமிழகத்தை தேர்வு செய்ததாகவும் குறிப்பிட்டார்.

முன்னதாக, ஜப்பான் நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்க்க தமிழக அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு செயல்களை தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., குறிப்பிட்டு விவரித்தார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு மேலும் பல்வேறு ஜப்பானிய நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் முதலீடு செய்யும் என்கிற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

சென்னையில் உள்ள ஜப்பானிய தூதர் கஜுவோ மினாகவா, சிஐஐயின் முன்னாள் தலைவர் வேணு சீனிவாசன், ஹிரோஷிமா பல்கலைக்கழக பேராசிரியர் டோஷியுகி சாவா, ஹிரோ டெக் அமெரிக்கா நிறுவன முதன்மை அதிகாரி கட்சுடோஷி மற்றும் மூத்த அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ★

தமிழக விவசாயிகள் அனுபவித்து வந்த கடன் சுமைகளை முழுவதும் அகற்றும் நோக்கில், 31.3.2006 வரை இருந்த கூட்டுறவு விவசாயக் கடன்கள் ஏறத்தாழ 7 ஆயிரம் கோடி ரூபாயை 13.5.2006 அன்று இந்த அரசு பொறுப்பேற்ற விழா மேடையிலேயே தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது. அதன் பயனாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஏறத்தாழ 22 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரும் பயன் அடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, விவசாயம் அல்லாத அதாவது, விசைத்தறி, செங்கல் சூளை போன்ற பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டு, பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த பண்ணை சாராக் கடன் பெற்றவர்களுக்கு ஏற்பட்டிருந்த கடன் சுமையைக் குறைத்திடவும் இந்த அரசு முடிவு செய்தது. அதன் பயனாக, 31.3.2007 அன்றைய நிலையில் தவணை தவறிய பண்ணை சாராக் கடன்கள் அனைத்திற்கும் அவர்கள் ஏற்கெனவே செலுத்தி வந்த 12 சதவீத வட்டியை 6 சதவீதமாகக் குறைத்தும், அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்தும் இந்த அரசு ஆணையிட்டது. இந்த வட்டிச் சலுகையைப் பெற்றிட பண்ணைசாராக் கடன் பெற்றவர்கள், தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த 31.3.2010 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது.



# பண்ணை சாராக் கடன்களுக்கான வட்டிச் சலுகை ஓராண்டுக்கு நீட்டிப்பு!

தமிழக அரசு வழங்கிய இச்சலுகை காரணமாக, 31.3.2010 வரை 79 ஆயிரத்து 932 பேர் 201 கோடியே 94 இலட்சம் ரூபாய் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தினர்.

எனினும், இச்சலுகையின் முழு பலனையும் பெற முடியாத நிலையில் மீதமுள்ள ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 722 பேர், இச்சலுகைத் திட்டத்தை மேலும் நீட்டிக்குமாறு அரசுக்குக் கோரிக்கை அளித்துள்ளதைத் தொடர்ந்து;

பண்ணை சாராக் கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வு திட்டத்தில் ஏற்கெனவே சேர்ந்து 25 சதவீதத் தொகையைச் செலுத்தியவர்கள், மீதம் செலுத்த வேண்டிய தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக 4 காலாண்டு தவணைகளில் 31.12.2011–க்குள் செலுத்தலாம் என்றும்;

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

இத்திட்டத்தில் இதுவரை சேராதவர்கள் – அவர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25 சதவீதத் தொகையை 28.2.2011க்குள் செலுத்தி, மீதத் தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக 4 காலாண்டு தவணைகளில் 31.12.2011க்குள் செலுத்தலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖




பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 122ஆவது பிறந்தநாளை முன்னிட்டு. 14.11.2010 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில். சென்னை. கிண்டி - கத்திப்பாரா சந்திப்பில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு. மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



கவிஞர் சுரதா அவர்களின் 90ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 23.11.2010 அன்று. சென்னை அசோக் நகரில் உள்ள.அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருப்படத்திற்கு. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள். மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி.சாமி அவர்கள். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன் அவர்கள் மற்றும் பனை நல வாரியத்துறை தலைவர் திரு. குமரி அனந்தன் மற்றும் தமிழ்வளர்ச்சி. அறநிலையங்கள் (ம) செய்தித்துறை செயலாளர் திரு.ரா.சிவகுமார் இ.ஆ.ப.. ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.






மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் (பொ) திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (பொ) திரு.த.இளங்கோவன், பேராசிரியர் சாமுவேல் சுந்தர் ஆகியோர் உடன் உள்ளனர். (2–11–2010)

## ரூ.745 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் 6 ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அணைகள் புனரமைத்து மேம்படுத்தப்படும்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

தமிழ்நாட்டில் உள்ள அணைகளை 745 கோடியே 49 இலட்சம் ரூபாய் உலக வங்கி நிதியுதவியுடன் புனரமைக்கவும், மேம்படுத்தவும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அடுத்த நிதி ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகளில் படிப்படியாகச் செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நீர்வள ஆதாரத் துறையின்கீழ் உள்ள 66 அணைகளையும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 38 அணைகளையும் புனரமைப்பு செய்து மேம்படுத்துதல் தொடர்பான திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்காக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் 11 உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றினை (Empowered Committee) அமைத்து
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.11.2010 அன்று ஆணையிட்டுள்ளார்கள்.




வேளாண் கருத்தரங்கம் மற்றும் அலுவலர்கள் மாநாடு (24.11.2010)




மகளிர் சுய உதவிக் குழு மகளிருக்கு சுழல் நிதி வழங்கும் விழா (15.11.2010)

R.N.I. No.21446/70 Regn.No. TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும் கட்டி அணைப்பது போன்ற சாதாரண பழக்க வழக்கத்தினால் எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர் பயன்படுத்திய கழிவறையைப் பயன்படுத்துவது அல்லது பொருட்களை மாற்றிக் கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ் பரவாது.

எய்ட்ஸை ஒழிப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி. கிருமி உள்ள இரத்தம் மூலம் மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம் செய்யப்பட்டாத பிளேடுகளை, ஊசிகளை பகிர்ந்துகொள்வதால் பரவும்.

**ஒரு துளி இரத்தம் போதுமே**
**உங்கள் உடல் நலனை அறிய**
திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம்
ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி
உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு
அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி
மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த
ஆலோசனை மற்றும் பரிசோதனை
மையங்களை (ICTC) அணுகவும்

வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை தவிர்த்தல்.

திருமணத்திற்கு பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே பயன்படுத்துதல். இரத்த தானம் செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம் எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால் பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால் உரிய சிகிச்சை மேற்கொண்டால் தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி அழித்து விட வேண்டும். இந்த உபகரணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

# சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்

82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.

**இலவச தொலைபேசி : 1913**

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010